

# சிவதொண்டன்

**எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்**


மலர் 88

குரோதி வருடம் ஐப்பசி - கார்த்திகை (2024 நவம்பர் - டிசெம்பர்)

இதழ் 11-12


## முப்போதும் வணங்குமின்

**திருச்சிற்றம்பலம்**





முந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணாமலை
சிந்தி யாவெழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரசு நாயனார்**





**பொழிப்புரை :**

முந்துறச்சென்று , மாலைச்செவ்வானன்ன மேனி உடையானுடைய திருவண்ணாமலையை மூன்று பொழுதும் வணங்குவீர்களாக. அத் திருவண்ணாமலையைச் சிந்தித்தபடி துயிலெழு வார் வினைகளை, நறுமணமுடைய மலர்களைச் சூடும் தலைவனாகிய பெருமான் தீர்ப்பான்.


சிவதொண்டன் நிலையம் - யாழ்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம்

சிவதொண்டன்

உ
சிவமயம்

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 03/11/2024<br>01/12/2024 | ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00 மணிமுதல் | சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம். |
| ஆயிலியம் | 22/11/2024<br>19/12/2024 | வெள்ளி<br>வியாழன் | நண்பகல்<br>பிற்பகல் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம்<br>செங்கலடி சிவதொண்டன் நிலையம் கொழும்புத்துறை |

எதிர்வரும் 04.11.2024 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆண்டுவிழா நாளாகும்.அன்று பிற்பகல் 3.00 மணிமுதல் திருவடிக்கு திவ்யமான அபிடேகம் இடம்பெறும்.

## பொருளடக்கம்

| விடயம் | பக்கம் |
|---|---|
| ஒரு குறைவுமில்லை | 01 |
| ஸ்திதப்பிரக்ஞன் : ஒருவிளக்கம் - 1 | 02 |
| அஷ்டா வக்ரகீதை | 07 |
| இன்று நாம் என்ன செய்ய வேண்டும் | 09 |
| அமிர்தபிந்து உபநிஷதம் | 12 |
| நாம் கடவுளை ஒருபோதும் மறந்திருக்க முடியாது! | 13 |
| கார்த்திகைத் தீபம் | 15 |
| அன்பும் பக்தியும் | 17 |
| கொளுத்தி எரிக்கும் யாகநாள் (ஆசிரியர்) | 19 |
| நற்சிந்தனை | 21 |
| Natchinthanai | 23 |
| You do not require much learning | 24 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ் மாநகர
18 NOV 2024

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 88 குரோதி வருடம் ஐப்பசி - கார்த்திகை (2024 குரோதி - நவம்பர் - டிசெம்பர்) இதழ் : 11-12

## ஒரு குறைவுமில்லை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே
ஆகையால் நாம் அவருடைய உடைமை
அவருடைய அடிமை
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது
நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்று முள்ளோம்
எங்கு மிருக்கிறோம்
எல்லா மறிவோம்

பொதுசன நூலகம்
16 NOV 2024

இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

"சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந் தன்மை
நினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே"

என்னுந் தாயுமானவர் அருமைத் திருவாக்கே இதற்குப் போதிய சான்று.

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்திதப்பிரக்ஞன் : ஒருவிளக்கம் - 1

## முகவுரை

வேதாந்த தரிசனத்தை எடுத்துக்கூறும் ஆன்மீக நூல்களுள் பகவத் கீதை ஒன்று. கீதைக்குப் பிரதான நோக்கம் ஒன்று உண்டு. அந்த நோக்கத்தில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, ஞானியின் இயல்பை உன்னைப் புரிந்து கொள்ளச் செய்வது. மற்றது, ஞானியின் இயல்பை உடையவனாக நீ மாற வேண்டிய அவசியத்தைப் புரிந்துகொள்ளச் செய்வது. ஆன்மீக நூல்களில் உள்ள தலையங்கங்களுள் முக்கியமான ஒரு விடயம் உன்னையே நீ அவதானித்துக்கொள் என்பதாகும். கிருஷ்ணபகவானாலே அளிக்கப்பட்ட கீதையும் அதனையே பிரதானமாக விளக்குகின்றது. இந்த விடயமான ஞானியாக இருக்க வேண்டிய கருத்துக் களைக் கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் 55 முதல் 72 வரையுள்ள பதினெட்டுச் சுலோகங்களில் காணலாம்.

ஞானி என்பவன் ஞானமுள்ளவன். ஞானம் என்பது அறியப்பட வேண்டிய ஒரு பொருளோடு தொடர்புடையது. இங்கு தொடர்பு கொள்ளப் பட வேண்டிய பொருள் ஆத்மா. அந்த ஆத்மா ஒவ்வொருவரிடமும் உள்ளது. இதனை நாம் ஞானத்துக்குரிய பொருள் என்று கூறலாம். மேலும், இது ஒவ்வொரு மனிதனதும் அடிப் படை உண்மையாகும். அந்த உண்மையை ஒருவர் ஆராயும்போது அங்கு அவருடைய உணர்ச்சிகளுக்கு எவ்விதமான பெறுமதியும் வழங்கக்கூடாது. அவ்வாறான ஆய்வில் அவர் தனது உணர்ச்சிகளையும் கலக்கக்கூடும். ஆனால், உண்மையின் இயல்பைத் தீர்மானிக்கும் போது இந்த உணர்ச்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடாது. எமது வாழ்வு பெற்றோர், நண்பர்கள், சகோதர சகோதரிகள் முதலானோரின் அன்பு உணர்வுகள் நிறைந்தனவாயே இருக்கின்றன. எனினும், இவ்வகை அன்புகளோடு வாழ்வு நிறைவு பெறுவதில்லை. அத்துடன் உணர்ச்சிகளின் பொருட்டு உண்மையின் இருப்பு எவ்வாறு உள்ளதோ அதனிலும் குறைவ தற்கு இடம் அளிக்கக் கூடாது. உண்மை எப்படி உள்ளதோ அதை அப்படியே அவதானித்துக் கற்றுக் கொள்ள வேண்டும்.

உண்மையைப் பிரமம் என்றோ ஆத்மா என்றோ கூறலாம். எப்படிக் கூறினாலும் அது ஒருவரின் சொந்த உண்மையான இயல்பாகும். அது ஓர் உணர்வோ மனோபாவமோ மனஎழுச்சியோ அன்று. அத்துடன், அது ஒருவரின் உறவுகளை மேலும் ஒன்றால் அதிகரிப்பதும் அன்று. அதே வேளை, அது ஒரு மனதுக்கு எட்டாத விடயம் என்று எண்ணவும் முடியாது. அது விளக்கம் அளிக்கப்பட முடியாது இருக்கும்போது மட்டுமே அதை மனதுக்கு எட்டாத விடயம் எனலாம். அதற்கு மாறாக, ஞானம் சந்தேகத்துக்கு இடம் அளிக்காத ஒருவிடயமும் ஆகும். மேலும் அது பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு விடயத்தோடு திருப்திப்பட்டுக் கொள்வதும் அன்று. அது காணப்படாத ஞானத்தை மட்டும் தெளிவாக விளக்கக் கூடிய ஒரு விடயமே. இல்லாத ஒன்றின் ஞானத்தை எவராயிருப்பினும் வைத்திருக்க முடியாது. ஞானம் ஒரு பொருளோடு தொடர்பு பட்டதே. ஒரு பொருளைப் பற்றியே ஒருவர் எப் பொழுதும் அறிய முடியும்.

பகவத்கீதை போன்ற ஆன்மீக நூல்கள் யாவும் உன்னைப் பற்றியே கூறுகின்றன. கீதையின் இரண்டாம் அத்தியாயத்தின் முற்பகுதியில் ஒருவரது சொந்த இயல்பைக் கிருஷ்ண பகவான் விளக்கி இருந்தார். அத்துடன் அந்த இயல்பைப் பெறுவதற்கான முயற்சியையும் அவர் அங்கே புகழ்ந்து பேசியிருந்தார். அதற்குப் பின்னர், அவர் அர்ச்சுனனது வினாவுக்கு விடை அளிக்கும் போது ஒரு ஞானியின் பண்புகளை விபரமாக எடுத்துக் கூறுகின்றார். தனது போதனையில் பகவான் ஞானி என்ற பெயரில் மனதுக்கு எட்டாத ஒருவனை அர்ச்சுனன் அறிய வேண்டுமென எதிர் பார்க்கவில்லை. அவனுக்கு அல்லது எமக்கு, மனதுக்கு எட்டாத ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையை பகவான் தனது போதனையில் கூற வில்லை. அவர் ஞானி ஒருவரின் இயல்பையும் அவனது பண்புகளையும் விளக்கும் வேளையில் உன்னிடம் அவற்றைக் காண வேண்டும் என்ற உள்நோக்கத்தைக் கொண்டிருந்தார். கிருஷ்ண பகவான் தான் பேசுவதைப் பற்றித் தானே மிக நன்றாக அறிந்திருந்தார். அப்போதனையை அறிப வர் எவராய் இருந்தாலும் அதை அறியலாம் என்று தானே நன்கு உணர்ந்திருந்தார். எனவே அக்கருத்து மனதுக்கு எட்டாத விடயம் அன்று என்பதோடு மிகத் தெளிவானதும் ஆகும். அது மனதுக்கு எட்டாத விடயமாயிருப்பின் பகவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வாயை மூடி மௌனியாக இருந்திருப்பார். மனதுக்கு எட்டாத விடயத்தை எந்த மொழியிலும் கூற முடியாது. ஆகையால் அதற்கேற்ற மொழி மௌனமொழியாகவே இருக்க முடியும்.

வாழ்க்கையில் எம்மில் ஒவ்வொருவரும் எம்மைப் பற்றி ஓரளவு அறிந்து வைத்திருக்கின்றோம். அது போன்றே மற்றவர்களும் எம்மைப் பற்றி ஓரளவு அறிந்திருக்கிறார்கள். இவை இல்லாவிடின் மனித வாழ்வின் அலுவல்களை மேற்கொள்வதே சாத்தியமில்லாது போய்விடும். எனினும், இந்த அறிவு உண்மையைப் பொறுத்தவரையில் போதியது அன்று. உனது நாளாந்த வாழ்க்கையில் உன்னைக் காட்டிக் கொள்வதற்கு மட்டும் அந்த அறிவு போதுமானதாக இருக்கலாம். இந்த அடிப்படையில் மட்டுமே அவர்கள் உன்னைப் பற்றிய அபிப்பிராயத்தையும் உணர்வுகளையும் பெறுகிறார்கள். இதனாலேயே நீ உன்னைத் தொடர்ந்து திருத்திக் கொள்ளவும், வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விதமாக உன்னைக் காட்டிக் கொள்ளவும் முடிகிறது. நீ உன்னைப் பற்றியும், மற்றவர்கள் உன்னைப் பற்றியும் எதை நீ அறிந்திருக்கிறாயோ அது உனது வருங்கால வாழ்க்கைக்கு மேலும் சில கருத்துக்களை உனக்குத் தருகின்றது. எனினும், எந்த ஒரு கட்டத்திலும் சந்தேகத்துக்கு இடமின்றி எம்மைப் பற்றிப் பூரணமாக அறிய அது போதுமானது அன்று. எமது மற்றவர்களோடு உள்ள உறவில் நாம் உடம்போடும் மனத்தோடும் குறித்த பெயருள்ள ஒருவர் அல்லது சம்சாரி எனக் காட்டிக் கொள்வது எம்மைப் பற்றி உறுதியான மதிப்பீடு செய்யப் போதியதன்று. அத்துடன் மற்றவர்களால் எதிர்பார்க்க முடியாத வகையிலேயே நாம் பெரும்பாலும் நடந்து கொள்ளுகின்றோம். இந்தக் கருத்தை வெளிப் படுத்தத் தமிழில் ஒரு அழகான பழமொழி உண்டு. “வெண்காயத்தை உரித்தால் மிஞ்சுவது எதுவுமில்லை” என்பதே அந்தப் பழமொழி. எனவே, நாம் உண்மையில் எம்மைப் பார்க்க முடியுமாயின் பரிகாசத்துக்கு இடமாயிருப்பது புரியவரும். மேலும், மனித ஆளுமை தேவைகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. தேவை எதுவும் இல்லையெனில் யாருக்கும் ஆளுமை இருக்க முடியாது. தேவைகள் இருக்குமட்டுமே மனிதமனம் ஒரு ஆளுமையை வைத்திருக்கமுடியும். நித்திரையில் யாரும் தனது சாதனைகளை எண்ணி மகிழ முடியாது. அதுமட்டுமன்றி, நித்திரையில் சாதனை செய்யவும் முடியாது. இதனால் நித்திரையில் ஆளுமையைக் காண முடியாது. எனவே, தேவைகளில் தான் ஆளுமை இருக்க முடியும். அத்துடன் மனிதன் எப்பொழுதும் தேவைகள் உள்ளவனாகவே இருக்கின்றான். ஒருவர் தன்னை எவ்வாறு உணருவார் என்பதும், தனது பேராசைகளை எவ்வாறு உணருவார் என்பதும் எதிர்பார்க்க முடியாத விடயங்களாகும். எனவே, ஒருவரிடம் தன்னைப் பற்றித் திடமான புரிதல் இருக்க முடியாது. உண்மையில் இரண்டு மனிதர்கள் ஒரே மாதிரியானவர்களாய் இருப்பதில்லை. அதேபோல ஒரே சூழ்நிலையில் ஒரே மாதிரியே அவ்விருவரும் நடந்து கொள்வார்கள் என்பதும் இல்லை. நாம் எவ்வாறு ஒருவரையொருவர் அறிந்திருக்கிறோம் என்பதும் மனதுக்கு எட்டாத விடயமே. கீதை எமக்குச் சொல்வது அவ்வாறான மனதுக்கு எட்டாத ஒரு விடயம் அன்று.

கீதை உமக்குத் தெரிவிப்பது என்னவெனில் உன்னுடைய கவனத்தை உன்னிடத்திலேயே செலுத்து என்பதே. ஞானத்தைப் பொறுத்தவரையில் பூரணமின்மை இருப்பதற்கு இடமில்லை. அநுபவ நிலைகள் ஒன்றோ எல்லாமோ இருந்தாலும் ஞானம் ஒரு போதும் மாறுவதில்லை. எனவே, இங்கு நீ ஆராயும் விடயமும் உன்னைப் பற்றியதே. “ நீ யார்” என்பது எந்த ஒரு சூழ்நிலையினாலும் அறிய வருவதில்லை. எனினும், ஒருவர் தன்னைப் பற்றி அவ்வாறு எண்ணுவதற்குப் போதிய ஆதரவான அனுபவங்கள் இருக்கின்றன. தந்தை, தாய், நண்பர் முதலான சூழ்நிலைகள் உனக்கு இருந்தாலும் பகவான் உன்னைப் பற்றிச் சில விடயங்களைக் கூறுகின்றார். வாழ்க்கையில் நீ யார், நீ என்னவாக வர முயலுகிறாய் என்பவற்றை ஞான நூல்களின் வெளிச்சத்தில் அவர் உனக்குச் சொல்லுவது அப்படிச் சூழ்நிலை நிர்ணயிக்கும் அறிவு அன்று. பகவான் கூறுவது ஒரு நூலில் கோர்க்கப்பட்ட முத்துக்களைப் போன்ற ஒரு விடயமாகும். ஒளிவிடும் முத்துக்கள் கோர்க்கப்பட்டுள்ள நூல் காண முடியாததாயும், எவருடைய கவனத்துக்கும் படாததாயும் இருக்கும். இதுபோன்றே உன்னைப் பற்றி நீ கொண்டுள்ள கருத்தும் ஆகும். இவ்வநுபவங்களை மட்டுமே உனது வாழ்விலும், செயல்களிலும், எண்ணங்களிலும் அநுபவித்து மகிழ்கின்றாய். வாழ்வை அமைத்த இவ்விடயங்களின் பின்னால் அடிப்படையாக உள்ள உண்மை என்ற நூலையே ஆன்மீக நூல்கள் வைத்திருக்கின்றன. உங்களது வெற்றி தோல்விகள் எவற்றிலும் அந்த உண்மை தங்கி இருப்பதில்லை. எனினும் அதுவே உனது வாழ்வில் நீ உரிமை கோரும் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கிறது. ஒருவர் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் காண விரும்பித் தனது முயற்சிகளை முன்னேற்றம் உள்ளவையாக ஆக்க முடியும். அவற்றின் விளைவாக வரும் அது முன் னேற்றமோ மாற்றமோ அன்று. அவர் கூறுவது அழகானதும், முழுமையானதும், பூரணமானதும் ஆகும். அப்பூரணத்தையே ஆத்மா என்றும் பிரமம் என்றும் ஆன்மீக நூல்கள் கூறுகின்றன. இதுவும் இதன் இயல்பும் மேலும் நீ அதிகரித்துக் கொள்ளும் அநுபவங்களின் விளைவால் வருவதில்லை. இது தானாகவே நிகழும் ஒருவிடயமாகும்.

உன்னில் முன்னர் இல்லாத ஒன்றையே உன் னால் உருவாக்க முடியும். அவற்றால் நீ உனது ஆரோக்கியத்தையும், இனிமையான மன நிலையை யும் மேலும் சிறந்ததாய் ஆக்க முடியும். ஆனால், ஆத்மா உருவம் உடையதோ மனத்தோடு தொடர் புடையதோ அன்று. ஆனால், ஆத்மா உடம்புக்கும் மனதுக்கும் அப்பாற்பட்டதும், அவற்றுக்கு அடிப்படையானதும் ஆகும். இந்த அடிப்படை இருப்பை மட்டும் ஏற்றுக்கொண்டதும் சூழ் நிலைகள் பற்றி ஒருவர் சிலவற்றை முயற்சி செய்ய முடியும். வெறுமையான வெளியில் காட்சிகளை எவ்வாறு படக் கருவியால் உருவாக்க முடியாதோ அதுபோன்றே இந்த அடிப்படை இருப்பையும் உருவாக்க முடியாது. உன்னிடம் வெற்றுத் திரை ஒன்று இருக்குமாயின் எத்தனை காட்சிகளையும் அதில் காண்பிக்க முடியும். ஆழமான உட் கருத்தைக் கொண்ட ஆன்மீக நூல்கள் எதனை எமக்குக் கூறுகின்றனவோ அதுவே நாம் என்ற வெற்றுத்திரையாகும். மறுவார்த்தைகளில் கூறுவ தாயின், அதே எமது பிரக்ஞை ஆகும். நாம் காணும் அனுபவங்களே காட்சிகளாகும். திரையானது காட்சிகளோடும் இருக்கலாம். காட்சிகள் இன்றியும் இருக்கலாம். காட்சிகளின் சூழ்நிலை ஒன்றுக்கும் மேற்பட்ட பலகாரணிகள்மூலம் ஆக்கப்படுகின்றது. சந்தர்ப்பங்கள், ஒருவரது சொந்தப் பொது அறிவு, புத்தி, அறிவு, தேர்ச்சித்திறன், அறிவாற்றல்கள், மனப்பாங்குகள் முதலானவையே அக்காரணிகள். இவற்றுக்கெல்லாம் இடமளிக்க எப்பொழுதும் தயாராக உள்ள திரைக்கு இவை மேலதிகமாக எவற்றையும் சேர்க்கப் போவதில்லை. ஒருவரின் உண்மை இயல்பும் அப்படியானதே. அதுவே தொட்டு அறியமுடியாத ஆத்மா.

இந்த உண்மை புரிந்து கொள்ளப்படும் போது அநுபவங்கள் என்ற காட்சிகளால் திரை என்ற "நான்" உள்ளது போலப் பேணப்படுவதில்லை. அப்பொழுது அந்த "நான்" என்பது திருத்தப்படு கின்றது. அத்தியாவசியம், மனக் குலைவு, கர்மம் என்ற பிறப்பிலுள்ள தேர்ச்சி என்பன அநுபவங்களை உருவாக்குவதை நிறுத்தி விடுகின்றன. திரையில் விழும் காட்சிகள் போன்றதே அநுபவங்கள். எனி னும் உயிர் இருக்கும்வரை ஒருவரின் வாழ்க்கை காட்சிகள் நிறைந்ததாகவே இருக்கின்றது. உயி ரோடு வாழ்வது என்பதன் அர்த்தம் சூழ்நிலைகளுக் குக் கவனமாக இருப்பதையே குறிக்கின்றது.

இதுவே ஞானமடைதலின் மிக எளிமையான விளக்கம். இதைப் பற்றிக்கூற அறிஞர் தனது பேனாவைப் பயன்படுத்தும்போது மனதுக்கு எட்டாத விடயங்கள் சூழ்ந்து கொள்கின்றன. இதன் உண்மையை விழிப்போடு உணரும்போது அது ஒருவருக்கு அமைதியைத் தருகிறது. இந்த அமைதி வந்துவிட்டால் மேலும் எதனையும் விரும்ப வேண்டி இருக்காது. ஏனெனில், தான் ஆத்மாவே என்ற அநுபவஞானம் வேறெதையும் வேண்டாத அளவுக்கு நிறைவுள்ளதாக இருக் கிறது. இந்த எளிமையை உணருவதும், ஒரு போதும் முடிவுறாத இதன் பயனை உணர்வதும் ஆசையின்மை எனப்படும். ஒருவர் தனது இயல்பானதாயுள்ள இந்த ஆனந்தத்தை உணரலாம் அல்லது இதனைத் தவறவிடலாம். இதனைத் தவறவிடுபவர்களை அறிவில்லாதவர்கள் அல்லது அஞ்ஞானிகள் என்று கூறலாம். இதுவே பிரதான மாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டிய விடயம் என்றும், அதனால் திருப்தி அடையலாம் என்றும் எண்ணுபவர்களை ஞானிகள் எனலாம். ஒரு முறை பெற்றுக்கொண்ட போதனை எந்த ஒரு மாணவனது மனத்திலும் இந்த விழிப்புணர்வை உருவாக்குகின்றது. தளம்பல்களும், மனக்குலைவு களும் நிறைந்த உலகத்தை ஒருவர் கடப்பதற்கு வேண்டிய இரண்டு படகோட்டும் கம்புகள் ஆக இருப்பன ஞான வார்த்தைகளே.

ஒப்பீட்டு ரீதியாகக் கூறுமிடத்து மனிதன் தன்னைப் பிரக்ஞையுள்ள ஒருவனாகக் காண்கின்றான். அதற் குக் காரணம் அவனது இயல்பே. அது அவனுடைய அறிவுத்திறனாலோ, தேர்ச்சித் திறனாலோ விளைந்த தன்று. தான் பிரக்ஞை உள்ளவன் என்பதால்தான் அவன் தன்னைத் தனது பெயர் முதலியவற்றால் அறியும் திறமை உள்ளவனாக இருக்கின்றான். அதாவது அவன் அறிவுத்திறனும், தேர்ச்சித் திறனும் உள்ளவனாக இருப்பதால் பிரக்ஞை உள்ளவன் ஆவதில்லை. பிரக்ஞை ஒரு இயல்பான நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். நீ பிரக்ஞை உள்ளவனாக இருப்பதால் தான் விடயங்களை அறிவதற்கும், அவற்றை ஞாபகப்படுத்துவதற்கும் ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றாய். ஞாபகப்படுத்துகின்ற மனம் அதை மறக்கக் கூடியதாகவும் இருக்கிறது. இந்த மறதி எவ்வளவு முக்கியமான வரப்பிரசாதம் என்பதைப் பின்னர் பார்த்துக் கொள்வோம். அது ஓர் இருப்பாயுள்ள உண்மையை அறிந்து கொள்வதற்கு இயல்பானதும் ஒருவரிடம் உள்ளதுமான ஒருவிடயம். கற்றலின் இரகசியம் இவ்வகையான மனத்தின் நேர்மையிலேயே தங்கி இருக்கின்றது. மனதுக்கு வழங்கும் தகவல் சரியானதாய் இருப்பின் அம்மனம் தனது இயல்பான நடத்தைகளில் உண்மையானதாயும், நேர்மையானதாயும் இருக்கும். அம்மனம் தனக்கு வழங்கப்பட்டதை வெளிப்படுத்துமே அன்றித் தனக்குத் தெரியாததை ஒருபோதும் வெளிப்படுத்தாது. அறிவதற்கும், ஞாபகப்படுத்துவதற்கும் ஆற்றலுள்ள ஒருமனம் மறக்கவும் ஆற்றலுடையதாக இருக்கும். உண்மை, வாழ்க்கையின் குறிக்கோள் என்பவற்றின் பெயரில் மனிதருக்குப் பல விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவற்றைக் கொண்டவர்களையே நாம் மனிதர்கள் என்று கூறிக் கொள்கின்றோம். ஆனால் ஆழமாகப் பகுப்பாய்வு செய்தால் அவை உண்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது தெரியவரும். ஆன்மீகவயமாய் இருப்பது மனதுக்கு எட்டாததும், அசாதாரணமானதும் என்ற ஒரு பொது நம்பிக்கை இருக்கிறதே! அந்தப் பொது நம்பிக்கை அப்படி உண்மையானது அன்று. ஆன்மீக வயமாவது மிக ஒரு ஆழமான விடயமே. வாழ்க்கையானது ஒருவர் சிந்திக்க முடிவதைவிட மிக மிக ஆழமானது. அதன் களஞ்சியமோ சந்தர்ப்பம் ஒன்றில் விளங்கிக் கொள்வதைக் காட்டிலும் அதிகமானது. அத்துடன், அவ்விளக்கத்துக்கும் அது மேற்பட்டது. ஆனால், உண்மையைத் தேடும் ஒருவருக்கு அது கற்பிக்கப்படாது தொடர்ந்தும் இருக்கப் போவதில்லை.

உண்மையாகக் கூறுவதாயின், மனமானது பிழைக்கு எதிராகவும், அசாரணத்துக்கு எதிராகவும், இயல்பின்மைக்கு எதிராகவும் மட்டுமே புரட்சி செய்யக்கூடியது. இதற்கு மாறாக, உண்மை தானாய்த் தன்னிலேயே தங்கி இருக்கின்றது. உண்மையின் இரகசியத்தன்மை தானாக வெளியாகும் ஒன்றாம். அது உண்மை போலத் தோன்றுவதில் இருப்பதில்லை. சரி - பிழை, உண்மை - பொய் முதலானவற்றை நீ இணைக்க முயலும் போது இரண்டு வித்தியாசமான விழுமியங்களுக்காக நீ விவாதிக்கின்றாய். இதற்கு மாறாக, சிந்தனை செய்யும் ஒழுக்கமானது ஏதும் ஒரு விழுமியத்தின் விவாதத்தைக் காட்டிலும் மிக உயர்ந்தது. பழக்கத்தினால் இரண்டு வித்தியாசமான விழுமியங்களுக்காக நாம் விவாதிக்கின்றோம். அத்துடன் அவ்விவாதத்தின் அரைப்பகுதியைத்தான் பகிரங்கமாகச் சொல்கிறோம். ஆன்மீகக் கொள்கையையும், பாதி சடப்பொருள் கொள்கையையுமே சொல்கிறோம். இங்குதான் நாம் பொதுவாக முரண்பாட்டை அமைத்துவிடுகின்றோம். நாம் தகுந்த சிந்தனை இன்றிப் பல விடயங்களை நம்புகின்றோம். ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில், வருங்கால வெகுமதி ஒன்றுக்காகச் சில வழிகளினால் எங்கேனும் சென்றடைய நீ வைத்துக் கொள்ள வேண்டியது எதுவுமில்லை. அந்த வழிகளில் நிகழ்கால உண்மை விடுபட்டுப் போகிறது. இது மிக அபத்தமானது. நீ எப்படி இருக்கின்றாய் என்பதையே கீதையும், மற்றைய ஆன்மீக நூல்களும் வெளிப்படுத்துகின்றன. அந்த உண்மையில் நீ இன்னும் பூரணமாவதற்கு உனது பேராசைகள் தேவையற்றன. நீ எப்படி இருக்கின்றாய் என்பதன் ஒரு விழிப்புணர்வையே ஆன்மீக ஞானம் சுட்டி நிற்கிறது.

இந்தப் பரஸ்பர உலகில் நீ பிரக்ஞை உள்ளவன். தெளிவில்லாததாய் இருக்கின்ற போதும் நீ உனது மனத்தினதும், உடம்பினதும், அவற்றின் தேவைகளினதும் இருப்பை அறிகின்றாய். அது இயல்பான முயற்சியுள்ள ஒரு மனிதனாக உன்னை ஆக்கிவிடுகின்றது. இந்த வாழ்வில் உனது தேவைகளைத் திருப்தி செய்வதற்கு இவ்வுலகத்தை நீ பயன்படுத்த ஆரம்பிக்கின்றாய். அதேபோல உனக்குத் தெரியாததைத் தெரிந்து கொள்ள முயலவும் உன்னால் முடியும். நீ தெரிந்த பலவற்றை மறந்தும் இருக்கின்றாய். உன்னைப் பற்றிய ஓர் உண்மையையும் நீ மறந்து விட்டாய் என்பதும் ஓர் எளிய உண்மையே. நீ உன்னை மறக்காது உனது ஆனந்த நிலையை ஞாபகப்படுத்திக் கொள்வதே தியானம். தீ சுடும் என்பதையும், தண்ணி குளிரும் என்பதையும் உனது மனத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கே ஒருவர் தியானம் செய்கின்றார். ஒருவரது அநுபவத்துக்கு அவ்வாறு அது உண்மையாக இருப்பதால் எந்த எதிர்ப்புமின்றி மனம் முயற்சியின்றியே ஏற்றுக்கொள்கிறது. அதன்பின், நீர், நெருப்பு என்பவற்றோடு மனதின் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையானதாய் இருக்கும். அங்கு மனத்தால் பூரணமாக அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தப் பூரண ஏற்றுக்கொள்ளலானது முதிர்ந்த தியானம் எனப்படும்.

பகவான் உன்னைப் பற்றிக் கூறும் உண்மை எதுவோ அதை நீயே புரிந்து கொண்டு காணும் போது உனது அவதானங்கள் உன்னைத் தப்பெண்ணங்களில் இருந்து விடுவித்து விடுகிறது. அதன்பின் மனம் உண்மையை இயல்பாகவே கண்டுகொண்டு அவ்வுண்மைக்கேற்ப நடந்து கொள்ளும். துரதிஷ்ட வசமாக இந்தவிழிப்புணர்வு எம்மால் தவற விடப்படுகின்றது. இதை மறக்கா மல் இருக்கும் ஒருவனே ஞானி.

இந்த ஞானத்தைப் பகவான் ஞானியின் பண்புக ளாகக் கூறும்போது உன்னைப் பற்றியே கூறுகின் றார். இதனை நாம் செயல்படுத்தக்கூடிய ஞானம் எனலாம். இந்த ஞானமே ஆன்மீக வளர்ச்சியின் உச்சக்கட்டமாகும். இது ஒரு அகரீதியான வளர்ச்சி. அத்தோடு இது மனதுடன் தொடர்பான ஒரு விடயமும் ஆகும். மனதின் இந்த நிலையை நீ அறியும்போது குறைந்தபட்சம் உனக்கே மனங்கடந்த ஒரு விடயமாக அது இருக்கும். தற்போது இது உனது அநுபவத்தில் இல்லை. இது உனது நாளாந்த வாழ்க்கைக்கு அப்பாலுள்ள ஒரு சாத்தியமான விடயம் மட்டுமே என்று நீ கருதுகின்றாய். அதனை நடைமுறையில் பயிற்சி செய்யாது விட்டுவிடுகின்றாய். நீ நாளாந்த வாழ்க்கையில் சிக்கி அதிலே திருப்தியும் அடை கின்றாய். இதனைச் செயல்படுத்தி இதன் சிக்கலை நீக்க மனிதமனம் முயல வேண்டும். அது இல்லையெனில் மனம் எதிர்மாறான விடயங் களையே தன்னிடம் நிறைத்துக் கொள்ளும். எது சாதாரணமானதோ அதை மனம் கடந்த விடயமாகவே மனம் எடுத்துக் கொள்ளுகின்றது. இது மனம் கடந்தது என்று எண்ணுவதால் இதை நடைமுறைப்படுத்த முடியாது என மனமே தீர்மானிக்கின்றது.

கீதை வேதாந்த விடயத்துக்குத் தன்னை ஒரு பிரதிநிதியாக வைத்துக் கொள்கிறது. அதற் கேற்ப "நான்" என்பதன் உள்ளடக்கத்தை ஒரு வழிமுறையோடு கீதை ஆராய்கிறது. உன்னைப் பற்றி நீ உடம்பு, புலன்கள், மனம் முதலாவையாக இதுவரை எண்ணி வந்துள்ளாய். அதனால் கீதை அவற்றைப் பற்றியும் பேசுகின்றது. உன்னை அது சீவன் எனக்குறிப்பிட்டு பின் சீவன் நீயில்லை என்று நிராகரித்துவிடுகிறது.

முன்னர் குறிப்பிட்டது போல பகவான் ஒருவ ரது சொந்த ஆத்ம ஞானத்தை மிக மேலான தாகப் புகழுகின்றார். அத்துடன் அவர் ஒரு ஞானியின் மனதின் நிலை பற்றி எல்லாச் சாத்தியமான துப்புக்களையும் தருகின்றார். நடை முறைப்படுத்தக் கூடிய இந்த ஞானம் பற்றிப் பகவானால் தரப்படும் உரைகல் உனக்காக மட்டும் உரியது. நீ உனது அகவளர்ச்சியைப் பரிசோதிப்பதற்கு அந்த உரைகல் உதவும். அந்த உரைகல்லைப் பயன்படுத்தி மற்றவர்களைச் சோதிக்கவும், அவர்களின் அநுபவ மட்டத்தை நிர்ணயிக்க முயலுவதும் தவறான செயல்களாகும். அவற்றை முயல்வது நோக்கமின்மையால் விளைந்த வெறும் மனக்குலைவே. உண்மையை உள்ள படியே உணரும்போதும், அதோடு தவிர்க்க முடியாதபடி உன்னை இனங்காணும் போதும் ஓர் ஆழமான நிலைமையை நீ உணருவாய். அதாவது, ஒருவரின் உறவுகளுக்கான ஒருபொருள் உண்மை அல்ல என்பது அந்நிலையினால் தெரியவரும். ஒருவரின் உறவுகள் உணர்ச்சிகளையும், மன வெழுச்சிகளையுமே தரும். உண்மையினை உறவுகளோடு தொடர்புபடுத்தினால் அந்த உண்மை ஓடி ஒளித்துவிடும். ஆனால் ஒருவரது மனமானது உண்மையோடு ஒரு தொடர்பை உருவாக்கிக் கொள்ளலாம். அப்பொழுது உனது மனத்தை உண்மையான மனம் என்று கூறப்படும். இந்த உண்மைப் பண்பு எமது உறவுகளிலும், நடத் தைகளிலும் வெளிப்படும். மனதைச் சூழ்நிலைக்கு உறவு கொள்ளச் சுதந்திரம் அளிக்கும்போது அது உணர்வுகளோடும், உணர்ச்சிகளோடும், கௌரவத்தோடும், மரியாதையோடும் சேருவது இனிப்போதும் என்ற நிலையை அது எடுத்துக் கொள்ளும். ஆனால் உண்மையை நடைமுறையில் உணர்ந்து அறிவது உணர்ச்சியால் வருவதில்லை. ஒருவர் உண்மையை உணர்ந்து அறியும் போது புதுமையும், ஆழமும், விளக்க முடியாத இருப்பும் வந்து அமையும். அவை யாவும் ஒவ்வொரு கணமும் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். அதனை மனதுக்கு எட்டாதென ஒருவர் அழைக்க விரும்பினால் அழைக்கட்டும். ஆனால், அது "அறியப்பட்ட மனதுக்கு எட்டாத" விடயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டா வக்ரகீதை - தொடர்ச்சி

## அத்தியாயம் - 9

## பற்றின்மை

**1) அஷ்டாவக்ரர் கூறியது:**

**கடமைகளைச் செய்வதும்; செய்யாமல் விடுவதும் முதலான இரட்டைகள் எப்போது மறையப் போகின் றன? அந்த இரட்டைகள் யாருக்கு? இவற்றை உணர்ந்து ஆசை அற்றவன் ஆவாய். உலகத்துக்கு முழுவதுமாய் அக்கறை செலுத்தாதே. அவ்வாறு செய்வதன் மூலம் துறவை மேற்கொள்வாயாக.**

**a) எப்போது:** இன்பம் - துன்பம், வெற்றி - தோல்வி, நல்லது - கெட்டது முதலானவை போன்ற இரட்டைகளின் கலவையே உலக வாழ்க்கை. அத்துடன் நாம், எப்பொழுதும் சிலவற்றைச் செய்யவும், சிலவற்றைச் செய்யாமல் விடவும், தெரிவு செய்கின்றோம். அத்தெரிவு காரணமாகச் சிலவற்றுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். நாம் இந்த உலகம் உண்மையானது எனக் கருது கின்றோம். அக்கருத்து இருக்கும் வரை நாம் இரட்டைகளில் இருந்து விலகவோ கடமைகளில் இருந்து விலகவோ முடியாதவர்களாய் இருக்கின் றோம். இந்த நிலையில் இருந்து வெளியேறுவதற் கான ஒரேயொரு வழி உலகம் உண்மை இல்லாதது என உணர்வதே. அத்துடன் அவற்றோடு நம்மை இனங்கண்டு கொள்வதை விட்டுவிடுவதும் அவ் வழியைச் சார்ந்ததே.

**b) ஆசையில்லாதவன் :** மத சம்பந்தமான கிரியைகளைச் செய்வதோ சபதங்களைச் செய்து கொள்வதோதான் ஆசை. அவற்றை விடுபவன் ஆசையில்லாதவன். உலக ஆசைகளோ சுவர்க்க இன்பமோதான் இக்கிரியைகள், சபதங்களுக்கான காரணம். (சபதம் = விரதம்).

**2) மனிதனது வழிகளை அவதானிப்பது மூலம், அதிஷ்டசாலிகளானவர்கள் வாழுவதற்கான விருப் பம், இன்பத்துக்கான விருப்பம், கற்பதற்கான விருப் பம் என்பவற்றை இல்லாது செய்துவிட்டனர். எனது குழந்தையே! அப்படியான அதிஷ்டசாலிகள் மிக அரிதாகவே உள்ளனர்.**

**a) அவதானிப்பது:** சில மனிதர் அவதானிப்பதன் மூலம் உலகின் வெறுமையைக் கற்றுக் கொள்கிறார் கள். அவர்கள் மற்றவர்கள் துன்பப்படுவதை அவ தானிக்கிறார்கள். மேலும், அவர்கள் நிலையான இன்பத்தை உலகத்தால் தரமுடியாது என்பதை உணர்கிறார்கள். அப்படியானவர்கள் மிக அரு மையே. அத்துடன், பெரும்பாலான மனிதர்கள் வாழ்ந்து அனுபவித்துப் பார்த்த பின் இதனைக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

**3) மூவகைத் துன்பங்களால் எல்லாம் பாழாகின்றன என்பதை உணர்வதன் மூலம் அறிஞன் அமைதி அடை கின்றான். எனவே மாறுகின்றவை, சாரமற்றவை, வெறுக்கத்தக்கவை யாவும் விலக்கப்பட வேண்டும்.**

**a) மூவகை:** மனம், உடல், உயிருள்ளன, சடப் பொருள்கள் என்பவற்றால் வருவன மூவகைத் துன்பங்கள். அத்துடன், இத்துன்பங்களுக்கு வெள்ளப்பெருக்கு, நில நடுக்கம் முதலானவை காரணமாகின்றன.

**4) எக்காலத்தில், எவ்வயதில் மனிதனுக்கு இரட்டை கள் இருப்பதில்லை? அவன் எப்போதும் இரட்டை களோடு வாழ்ந்து வருகின்றான். ஆனால், அவற்றில் இருந்து நீங்குகின்றபோது ஒருவன் எது தானாக வரு கிறதோ அத்தோடு திருப்திப்பட்டுக் கொள்கின்றான். அப்படிப்பட்டவனே முத்தி அடைகிறான்.**

கேட்டினாலும் துன்பத்தினாலும் அல்லாமல், மாசு படாத நன்மையும் ஆனந்தமும் இருக்கும் காலம் அல்லது வயது எப்போது தான் மனித னுக்கு வாய்க்கும்? எனவே வாழ்வின் போது அவன் ஆனந்தத்தையும் அமைதியையும் பெறலாம் என நம்ப முடியாது. அவன் உயர்ந்த கருத்து ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். உலக வாழ்க்கை யைக் கடப்பதனால் மட்டுமே அமைதியையும் பூரணத்துவத்தையும் அடைய முடியும் என்பதே அந்த உயர்ந்த கருத்து. அத்தோடு அவற்றைப் பெற அவன் உலக அனுபவங்களில் பற்று இல்லாமல் இருக்க வேண்டும்.

**5) மாபெரும் ரிஷிகள், சாதுக்கள், யோகிகள் என்பவர்களின் கருத்துக்களில் உள்ள வேறுபாடு அவ தானிக்கப்பட்டதும், கற்பதற்குப் பூரண அக்கறை இல்லாதவன் ஆக இருக்க முடியும். அவ்வாறில்லாத வன் எவ்வாறு அமைதி பெறுவது?**

**a) வேறுபாடு:** இது தத்துவ முறைகள் வேறாக இருப்பதைச் சுட்டும். வெவ்வேறு தத்துவங் களில் வாழ்வின் மிகப்பெரும் நலன்கள் வித்தியாச மானவையாகக் காணப்படுகின்றன.

**b) அமைதி:** உலகப் பொருள்களில் முழுமையான அக்கறை இன்மையை உணர்ந்தவர்களுக்கும், தன்னை உணரும் நோக்கம் மட்டும் உள்ளவனுக்கும் மனத்தின் இந்த அரிய பண்பு கிடைப்பது உறுதி யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6) உலகில் முழு அக்கறையின்மை, சமநிலை, காரண காரிய விளக்கம், பிறப்பு இறப்புச் சூழலில் இருந்து தன்னைப் பாதுகாப்பது என்பவற்றால் தூய பிரக்ஞை யின் உண்மைத் தன்மை பற்றிய அறிவைப் பெற்ற அவன் உண்மையான ஆன்மீக வழிகாட்டி அல்லவா?**

**a) சமநிலை:** இது நட்பு - பகை, இன்பம் - துன்பம் முதலானவற்றில் உள்ள சமநிலை ஆகும்.

**b) அவன் :** சென்ற பாடலில் ரிஷி, சாது, யோகி என்போர் ஆன்மிக வாழிகாட்டலுக்குத் தகுதி யற்றவர் என்பதற்குக் காரணம் அவர்களுடைய வேறுபட்ட தத்துவங்களே. இந்தப் பாடல் தானாகவே உண்மையை உணர்ந்தவன் மட்டுமே ஆன்மீக வழி காட்டியாக முடியும் என்கிறது. இக் கருத்தைக் கற்பதால் மட்டும் ஒருவர் குருவாக வர முடியாது. ஆனால் உண்மையான சாதனை, முத்தி என்பன ஒருவர் குருவாக ஆவதற்குரிய உயர்ந்த பண்புகளாகும்.

**7) பஞ்ச பூதங்கள் அவற்றின் மாற்றங்கள் என்ப வற்றை அறிவதில் உண்மையில்லை. இதிலிருந்து நீ உடனேயே பந்தத்தில் இருந்து விடுபடுபவன் ஆகி றாய். உனது உண்மையான ஆத்மா அல்லது முத்தி உள்ளவனாயும் ஆகிறாய்.**

**a) மாற்றங்கள்:** இது பஞ்ச பூதங்களால் உடம்பு. மனம், புலன்கள் என்பவற்றில் ஏற்படும் மாற்றங் களைக் குறிக்கும். உண்மையில் இவை எல்லாம் பஞ்ச பூதங்கள் அன்றி வேறேதும் இல்லை. பஞ்ச பூதங்களது இணைப்பின் அளவுகளே அம்மாற்றங் கள். இதனால் அம்மாற்றங்கள் வித்தியாசமான வடிவங்களைப் பெறுகின்றன. இவ்வடிவங்கள் அல்லது பொருள்கள் ஒன்றை அழகானது என்றும் மற்றொன்றை அவலட்சணமானது என்றும் எம்மைக் கருதுமாறு செய்கின்றன. இதனால் நாம் ஒன்றை விரும்பி மற்றதை வெறுக்கின்றோம். ஆனால் எல்லாப் பொருள்களும் ஒன்றே என நாம் உணரும் வேளையில் விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் மறைகின்றன. அப்போது நாம் எமது உண்மை நிலையை உணருகின்றோம். அத்துடன் முத்தியும் அடைகின்றோம்.

**b) முத்தி :** உடம்பினதும், உலகப் பொருள்களினதும் கவர்ச்சியை உள்ளடக்கியதே பந்தம், அக்கவர்ச்சியை விடுவதும், ஆத்மாவின் உண்மை இயல்பில் உறைவ துமே முத்தி.

**8) ஆசைகள் மட்டுமே உலகம். எனவே அவை எல்லா வற்றையும் துறந்து விடு. ஆசையைத் துறப்பது உலகைத் துறப்பதாகும். அப்போது நீ எங்கேயும் வாழலாம்.**

**a) ஆசைகள்:** ஆசைகள் தான் உலகத்தோடு நம்மைப் பிணிக்கின்றன. அவையே எம்மை உலகம் உண்மையானதெனச் சிந்திக்க வைக்கின்றன. இத னால் நாம் பிறப்பு, இறப்புச் சுழற்சிக்கு ஆளாகின் றோம். நாம் ஆசைகளில் இருந்து விடுபட்ட அக் கணமே உலகம் உண்மையானது என்ற எண்ணம் நீங்குகின்றது. அத்துடன் எமக்கு மேலும் பிறப்பு இல்லாமல் போகிறது.

**b) அப்போது:** ஆசையைத் துறந்தவன் பூரண விடுதலை அடைகின்றான். அவன் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுவதில்லை. இதனால் அவன் எவ்விடத் திலும் வாழக் கூடியவனாகின்றான்.

## தீபதர்சன தத்துவம்

**இத்தனுவே நானா மெனுமதியை நீத்தப்**
**புத்தியித யத்தே பொருந்தியக நோக்கா**
**லத்துவித மாமெய் யகச்சுடர்காண் கைபூ**
**மத்தியெனு மண்ணா மலைச்சுடர்காண் மெய்யே**

**- ஸ்ரீ பகவான்**

**பொழிப்புரை:** அழியக் கூடிய இந்த ஜடசரீரமே நான் ஆவேன் என்று (தேகாத்மபுத்தி) நினைக்கும் மனதை நீக்கி, அந்த மனதை உள் முகமாக்கி இதயத்தில்நிலையாகஒன்றி, உள்முகதிருஷ்டியால் இரண்டற்ற ஏகசத்தாகிய உள் ஒளியின் உண்மை சொரூபத்தை உணர்வதே, பூமியின் இதய ஸ்தானமாகக் கூறப்படும் அருணாசலத்தின் சிக ரத்தில் விளங்கும் ஜோதி ஒளியின் உண்மை என்று அறிவாயாக.

**விளக்க உரை:** அண்ணாமலையின் உச்சியில் ஏற்றி போற்றப்படும் தீபச்சுடரை அகப்பொருளாகக் கூறப்படும் போது, தனக்குள்ளேயே நீக்கமற நிறைந்த ஆத்மஜோதியைக்காட்டுகிறது. அதையே புறப் பொருளாகக் கூறும்போது ஊனக்கண்ணால் கண்டு மகிழக் கூடிய திவ்யமங்கள் ஜோதியாகிய திருக்கார்த்திகையின் தீபதரிசன தத்துவத்தை விளக்கி அருளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நாம் என்ன செய்ய வேண்டும்

**எப்பொழுதெல்லாம் அறம் அழிந்துபோய் மறம் மேலெழுகின்றதோ**
**அப்பொழுதெல்லாம் என்னை யான் பிறப்பித்துக் கொள்கிறேன் – (கீதை 4-8)**

**நல்லவரைக் காப்பதற்கும், கெட்டவரைக் கரந்தொடுக்குவதற்கும்**
**தர்மத்தை நிலை நாட்டுவதற்கும், யுகந்தோறும் யான் அவதரிக்கின்றேன் – (கீதை 4-9)**

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமுதாயத்திலும் காலத்துக்குக் காலம் அவதார புருஷர்கள் தோன்றி அந்தந்த நாடும் அந்தந்தச் சமுதாயமும் சீருஞ் சிறப்பும் பெற வழிகாட்டி வளர்த்து வந்துள்ளார்கள். அவதார புருடர்கள் இறைவனால் அனுப்பப்படும் மானிட தூதராவர். அவர்கள் ஒரு பேரரசனின் பிரதிநிதி போன்றவர்கள். நெடுந்தூரத்துக்கப்பாலுள்ள ஓர் பகுதியில் கலகம் நிகழும் போது அதனையடக்குதற்கு அவ்வரசன் தன் பிரதிநிதியை அனுப்புவது போல உலகின்கண் எவ்வெவ்விடங்களில் தருமம் மலினமடைகின்றதோ ஆங்காங்கெல்லாம் தருமத்தைப் போதித்துப் பாதுகாக்கத் தக்க சான்றோரை இறைவன் ஞானிகளாகவும் அவதார புருடர்களாகவும் அனுப்புகின்றார் என்பதே மகான்களின் கருத்தாகும்.

இம்மரபிலே, இம்முறையிலே ஈண்டு இவ்வுலகுக்கும், எமக்கும் அறிவு தெருட்டி வழிகாட்ட வந்த மகான்களுள் ஒருவர் எங்கள் யோக சுவாமிகள் ஆவர். ஞானிகளின் வாக்குகள் என்றைக்கும் பொருந்துவனவாகும். ஞானிகள் யாவரும் உண்மைப் பொருளை உலகுக்குக் கூறிச் சென்றனர். ஆகவே, இதற்கு முன்னவதரித்த ஞானிகளும், இறைவனடியார்களும், இறை மனிதர்களும், அதிமனிதர்களும் எதனைக் கூறிச் சென்றார்களோ அதனையே எங்கள் சுவாமிகளும் இன்று யாம் வாழும் சமுதாய நிலைக்கும் பழக்க வழக்கத்துக்கும் தக எமது மொழியில் எடுத்தியம்பியும் வாழ வழிகாட்டியும், வாழ வைத்தும் இருக்கிறார்கள்.

பாரதப் போரில் தருமம் வெற்றி பெறப் பாண்டவர் பக்கத்தில் நின்று தாமுமொருவராகக் கடமையாற்றியும், வழிகாட்டியும், இருபகுதியாருக்கும் தூதுவராகத் தொண்டாற்றியும் உலகினை ஓம்பிய கிருஷ்ண பகவான் போன்றும், அடிமை இந்தியாவின் மிடியைப் போக்கி அகிம்சை வழியில் நின்று சத்தியத்தைக் கடைப்பிடித்துத் தொண்டாற்றி ஆட்சியாளர்களையும் அடிமைகளையும் முறையே தேய்த்தும் வளர்த்தும் விழிப்படையச் செய்த மகாத்மா காந்தி போன்றும் எங்களுடைய நாட்டில் எங்கள் மொழியில் எங்கள் மரபில் எங்களை வழிப்படுத்தி மான் காட்டி மான் பிடிக்கும் கொள்கைத்தாகி அருட்குருவாய் விளங்கிய எங்கள் சுவாமிகள் எங்களுக்குக் கூறியன யாவை? வருங்கால வளம் கருதி எங்களைச் செய்யும்படி இட்ட கட்டளைகள் யாவை? இவற்றைப் பற்றிச் சிந்திப்பீர்களாக!

யாமெல்லாம் வாழ்வாங்கு வாழச் **சிவதொண்டு, சிவத்தியானம்** ஆகிய இரண்டினையும் விழிப் புடன் இருந்து செய்யும் வண்ணம் அவர் கூறியிருக்கிறார். இவையிரண்டினையும் பற்றிச் சுவாமிகள் பல அன்பர்களுக்குப் பரக்க விளக்கியும், பாடல்களின் மூலமும், உரை நடைப் போதனைகள் மூலமும் எழுதியும் வைத்திருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவற்றையீண்டு சிந்திப்போமாக.

### சிவதொண்டு

சிவதொண்டு செய்பவன் சிவதொண்டன். சுவாமிகள் தம்மைச் சிவதொண்டராகவே கருதியும் வாழ்ந்தும் வந்திருக்கிறார்கள். அப்பூதியடிகள் நாயனார் எவ்வாறு தம் மக்களுக்கும் தம் நிறுவனங்களுக்கும் எல்லாம் தம் குருவாகிய திருநாவுக்கரசு நாயனாரின் நாமத்தைச் சூட்டினார்களோ அவ்வாறே சுவாமிகளும் தோன்றாத் துணையாக இருந்து நடத்திய சஞ்சிகைக்கும், நிறுவிய நிலையங்களுக்கும் தமது வாழ்க்கைக் குறிக்கோள் யாவும் பொருந்தப் பொதிந்த பெயராகிய **சிவதொண்டன்** என்னும் பெயரினை இட்டுச் சென்றனர்.

"நாங்கள் சிவனடியார்கள்
எங்களுக்கு ஒரு குறைவுமில்லை
சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில்
அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது
சூரியனும் ஏனைய கிரகங்களும் அத் திருப்பணி
யையே செய்கின்றன
தேவர்களும் அசுரர்களும் கின்னரர் கிம்புருடர்
வித்தியாதரர்களும்
அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்"
... ...... .... .... ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் நாங்களே .... சிவ
தொண்டர் நாங்களே...
... .... .... .... .... .... .... ....
"சிவதொண்டன் என்னும் சிறந்த பட்டத்தினும் மேலான வேர் பட்டம் உளதாகுமா!"

என்பனவெல்லாம் சுவாமிகளின் திருவாக்குகள்.

சிவதொண்டு என்னும் பதம் இருபொருள் உடையது. சிவமாகிய இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்றும் சிவமாகிய இறைவன் செய்யும் தொண்டு என்றும் பொருள் கூறலாம். பூமி முதல் நாதமீறாகவுடைய தத்துவக் கூட்டுக்குள் அடையப்பட்டிருக்கும் உயிர் வர்க்கம் எல்லாம் முழுமுதற் பொருளாகிய சிவனையடையும் குறிக் கோளுடனேயே தொழிற்படுகின்றன. அவைகளுள் அதமப்படியிலுள்ளவர்கள் செய்யும் தொண்டுகள் யாவும் சுயநல நோக்காகவே அமையும். அறிவு முதிர முதிர ஆன்மாக்கள் பரநல நோக்காகவே தொண்டாற்றுகின்றனர். முன்னவர் தன்தொண்டும் பின்னவர் சீவத்தொண்டும் செய்வாராவர். தன் தொண்டினும் சீவத்தொண்டு சிறந்ததே எனினும் அதன் குறிக்கோள் குறுகியதேயாம். சீவர்கள் உழைக்கவும் உண்ணவும் தொண்டு செய்தால் போதுமா? இவர்கள் வாழ்வின் இலட்சியம் இவ்வளவு தானா! உண்டுடுத்து வாழ்வதில் திருப்தி வந்து விடுமா? இடையறா இன்பத்தையன்றோ யாவரும் நாடுவர். தம்மையறிந்தாலல்லவா இன்பம்வரும் தம்மையறிவதோடன்றித் தம்மை யுடையாரையறிய வேண்டாமா? தம்மையுடை யாரை அறியும் குறிக்கோளுடன் தொண்டாற்று பவர்கள்தான் தன்னையறிந்த பின் தலை வனையறியத் தொண்டாற்றுபவர்கள். சிவனாகிய தந்தலைவனுக்கு என்று அர்ப்பணஞ் செய்து தொண்டாற்றுவார். அப்பொழுது தான் அவர்கள் சிவதொண்டு செய்யத் தொடங்குகின்றார்கள். எனவே தன் தொண்டு சிவதொண்டன்று. சீவத்தொண்டும் சிவனுக் கென்ற உளப்பான்மையோடு செய் யப்படாத விடத்துச் சிவதொண்டன்று. செய்வ தெல்லாம் சிவார்ப்பணமாகச் செய்தலே சிவ தொண்டாகும். தனதென்பதும் தானென்பது மற்றுச் செய்யும் தொண்டே சிவதொண்டாகும். தன்னலத் தொண்டினால் இடையறாது மனம் சஞ்சலத் தாலும். அச்சம், கோபமாதியாம் சிறு மைகளாலும் மிகத்தாக்கும். சீவத்தொண்டினால் மனச் சஞ்சலம் குறையுமாயினும் செய்யும் 'நான்' என்னும் தனித்தன்மை அழியாத படியால் அப்போதும் ஓரளவுக்கு இன்ப துன்பங்கள் இருந்தேயாகும். சிவதொண்டாகச் செயல்களைச் செய்யும் போது.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்'

என்னும் தாழ்மையாம் பண்பு மிளிரும். ஆசை, அச்சம், கோபம் ஆகியன அகலும்.

"வினையாற்றவே கடமைப்பட்டுள்ளாய். வினைப்பயனில் எஞ்ஞான்றும் உண்மை பாராட்டாதே"
(கீதை 2 - 47)

யாவும் சிவன் செயலே என்னும் எண்ணம் உள்ளத்தில் பதியப்பதிய மனக்கொதிப்புகள், மன வேகங்கள், விருப்பு வெறுப்புக்கள் தாமாகவே அகலத் தொடங்கிவிடும். பயன் கருதாமல் பணி செய்யச் செய்யச் சித்த சுத்தியும் அதனால் சித்தத் தெளிவும் விளையும்: ஞானத்தைப் பெறும் தகுதியும் எய்தும். இதுவே யோக நிலையாகும். இருவினையொப்பும் கைகூடும். அதனால் சத்நிபாதம் நிகழும். இத்தொண்டினையே பகவத் கீதையிலும் கர்மயோகம் என்னும் அத்தியாயத்தில் கிருஷ்ணபரமாத்மா நிஷ்காமிய கர்மம் என்னும் முகதலையின் கீழ் விளக்கியிருக்கிறார். பயனில் பற்று வைக்காமல் யாவும் பரமன் பணியெனக் கருதி இடையறாது யாவரும் தொண்டாற்ற வேண்டும். தொண்டே தொழுகையாக வேண்டும். உழைப்பே உபாசனையாக வேண்டும். தொண்டின் மகத்துவம் விளங்கவே திருவீழிமிழலையில் அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் அளித்த காசு வாசியின்றி விலைபோனதும் சம்பந்தப் பெருமான் பெற்ற காசு வாசி கொடுத்து விலை போனதுமாம். அடியார் பலர் வரலாறுகள் மூலம் எடுத்துக் காட்டுக்களால் தொண்டின் விழுப்பத்தை ஈசன் உணர்த்தியிருக்கின்றார். பிறர் நலனோம்பச் சிவதொண்டினைச் செய்யாத பேதையர்க்கும் வையத்தில் வாழும் விலங்குகளுக்கும் என்ன வித்தியாசம் உளது! மற்றவர் வாழத் தொண்டாற்று பவனே மனிதன். தான் மட்டும் வாழ உழைப்பவன் தனிமிருகத்தையொப்பவனே. பூரணத்துவம் பெற விழையும் யாவரும் துறவு, தொண்டு ஆகிய இரு பண்புகளையும் தம்முள்ளத்தில் வளர்த் துக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். ஒரு நாணயத்தின் இருபக்கங்களையொப்பவே தொண் டும் துறவும் இணைந்துள்ளன. தொண்டின்றித் துறவுமில்லை; துறவின்றித் தொண்டுமில்லை.

அன்பர்கள் சிலர் மகாத்மாகாந்தியை நணுகி அவர் பிறந்ததினத்தைக் கொண்டாட அநுமதி கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அப்போது மகாத்மா அவர்களைப் பார்த்துக் கூறியதாவது, "மகான் ஒருவர் என்ன என்ன நற்கொள்கைகளுக்காக அயராதுழைத்தனரோ அவற்றைக் கடைப்பிடித்து வாழ்தலே அன்பர் களாயுள்ளவர்கள் அப்பெரியாருக்குச் செய்யும் நன்றியாகும். யான் உழைப்பையே என் உபாசனையின் சிறந்த அம்சமாகக் கருதினேன். அதனால் என் பிறந்த நாட் கொண்டாட்டத்தை உழைப்பின் சின்னமாக அமைந்த **சர்க்கா ஜெயந்தி** கொண்டாட்டமாகக் கருதி யாவரும் இயன்ற மட்டும் உலோகோபகாரமாக உற்பத்தி செய்யுங்கள். கூட்டம் போட்டுப் பேசிக் கும்மாளமடித்துவிட்டுச் செல்லாமல் நாட்டத்தோடு தத்துவங்களை நன்கு அலசிச் சிந்தித்து அவற்றைச் செயல்படுத்த வேண்டும். போதனையிலும் சாதனை சிறந்த தன்றோ!"

## மிலரேபா

மிலரேபா, திபேத்தில் வாழ்ந்த புகழ்மிக்க யோகி. உலகில் உள்ள பொருள்கள் எல்லாவற்றுக்கும் ஏற்படும் மாறுபாடுகளும், அழிவுகளும் பற்றிய இயல்புகளாலும், உயிரினங்கள் யாவும் துன்பங் களிலும், துயரங்களிலும் மூழ்கித் தவிக்கும் இயல்புகளாலும் இளமைக் காலத்திலிருந்தே அவருடைய உள்ளத்தில் ஆழ்ந்த பதிவுகள் பதிந்திருந்தன. அவரைப் பொறுத்தவரைக்கும் உலக வாழ்க்கை என்பது உயிர் வாழ்வன யாவும் வறுக்கப்படுகின்றஒருபெரியஉலைக்களம்ஆகும். உள்ளத்தைத் துளைக்கும் இத்தகைய வருத்தம் அவருடைய உள்ளத்தில் நிறைந்தது. இந்திரனும், நான்முகனும் நுகரும் விண்ணுலக இன்பங்களைப் பற்றிக் கூடப் பொறாமை சிறிதும் கொள்ளாத ஒரு மனநிலை அவருக்கு உண்டாகிவிட்டது. எனவே உலகில் பெருமை வாய்ந்து விளங்குவோர் நுகரக்கூடிய இன்பங்களும், மகிழ்ச்சிகளும் அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை என்று சொல்ல வேண்டியதில்லை.

இதற்கு மாறாக, களங்கமற்ற தூய்மையைக் காணும் காட்சியினாலும், நிர்வாணம் என்னும் பேரின்பப் பேற்றுடன் கூடிய முற்றும் உணர்தல், நிறைவான முக்திநிலை ஆகியவற்றை விளக்கும் புனிதமான அழகினாலும் அவர் உள்ளம் கவரப்பட்டார். உள்ளம் விரும்பிய அதனைத் தேடி அடைவதில் தம் உயிருக்கே இறுதி நேர்ந்தாலும் அவர் சந்திக்கத் துணிந்துவிட்டார். இதற்கான முழு நம்பிக்கையும், கூர்ந்தமதியும், அனைவர்பாலும் செல்லும் இரக்கமும், எங்கும் வியாபிக்கும் அன்பு பொங்கித் ததும்பும் உள்ளமும் உடையவராக அவர் விளங்கினார்.

மனத்தின் உலகியல் நிலையையும் ஆன்மீக இயல்பையும் கட்டுப்படுத்தும் அதீத ஞானத்தை அவர் பெற்றிருந்தமையால் விண்ணில் பறக்க வும், காற்றில் நடக்கவும், இளைப்பாறவும் உறங்கவும் தம்மால் முடியும் என்பதை அனை வரும் கண்ணாரக் காணுமாறு அவரால் செய்து காட்ட முடிந்தது. இதுபோலவே அவர் தம் முடைய உடம்பிலிருந்து நெருப்பின் சுடர்கள் தோன்றவும் நீர் ஊற்றுக்கள் வெளிப்படவும், தாம் விரும்பும் எந்த ஒரு பொருளாகவும் தம் உடம்பை மாறும்படிச் செய்யவும், அவரால் செய்ய முடிந்தது. இதனால் மத நம்பிக்கை அற்றவர்களையும் மதநோக்கம் கொள்ளுமாறு அவரால் மாற்ற முடிந்தது.

தியானத்தின் நான்கு நிலைகளையும் அவர் பயின்று நிறை நிலை பெற்றார். இதனால் அவர் இருபத்திநான்கு புனிதத் தலங்களில் வீற்றிருக்கும் தலைமையோகியாகத் தம் நுண்ணுடம்பை எழுந்தருளி இருக்குமாறு செய்தார். ஆன்மீகச் செய்திகளைப் பெறுவதற்காக அங்கே தெய்வங் களும், தேவதைகளும் நீர் முகக்க வரும் மேகங் களைப் போல் வந்து கூடியிருப்பார்கள்.

எல்லாப் பணிகளையும் நிறைவேற்றும்படியாகத் தம் கட்டளைகளை உடனடியாகக் கேட்டு நடக்கு மாறு அவர் தெய்வங்களையும் ஐம்பூதங்களையும் ஏவல் கொண்டார். இயற்கை கடந்த சக்திகளில் அவர் நிறை வல்லமை பெற்றிருந்தார். புத்தர் களின் எண்ணற்ற விண்ணுலகங்களையும் புனித மான பேரின்ப உலகங்களையும் கடந்து சென்று கண்டு வரப் பயணம் செய்யும் வல்லமையை அவர் பெற்றிருந்தார். நிகரற்ற அவருடைய பக்திப் பண்பினால் அங்கு ஆட்சி செலுத்திய புத்தர் களும், போதி சத்துவர்களும் வழங்கிய தர்மம் பற்றிய பேருரைகளைக் கேட்கும் பயன் பெற்றார். கேட்டதன் பயனாக அவர் விண்ணுலகங்களைத் தம் வருகையாலும் தங்குகையாலும் புனிதப் படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தபிந்து உபநிஷதம்

1. சுத்தமனம் அசுத்த மனம் என மனத்தினை இருபெரும் பிரிவாகக் கூறுவர். ஆசையுடையது அசுத்தமனம். ஆசையற்றது சுத்தமனம்.

2. மனிதனின் பந்தத்துக்கும் விடுதலைக்கும் காரணம் இம்மனமேயாகும். புலனின்பத்தில் பற்று வைத்திருக்கும் மனம் பந்தித்தலைச் செய்யும். புலனின்பத்தில் பற்றற்றிருக்கும் மனம் விடுதலைக்கு வழிகோலும். அறிஞர் இவ்வாறு எண்ணுகின்றனர்.

3. பற்றற்ற மனமே விடுதலைக்கு ஒருவனை உய்ப்பதால் விடுதலை நாட்டமுடையோன் என்றும், பற்றற்றிருப்பதற்கு மனத்தினைப் பயிற்றல் வேண்டும்.

4. புலனின்பங்களில் நாட்டமுறாது மனம் முற்றாக நசிக்கப்பட்டு, இருதயத்துள் ஒடுங்கித் தன் சுயரூபத்தை உணரும்போது பரமபதம் (மேலான இன்பம் உண்டாகிறது) கிட்டுகின்றது.

5. இருதயத்தோடு இரண்டறக் கலக்குமளவுக்கு மனத்தின் முனைப்பு மழுங்கப்படல் வேண்டும். இதுவே ஞானம். இதுவே தியானம், ஏனைய யாவும் வீண் வார்த்தைகளாகும்.

6. பரமபதம் மனத்துக்கிதமான ஏதோவோர் புறம்பான அனுபவ நிலையுமல்ல. மனத்துக்கிதமற்ற நிலையுமல்ல. புலனுக்கு இன்பந்தரும் ஏனையவற்றைப் போன்றவோர் பொருளுமல்ல. என்றுமுள்ள எல்லாமாகவுள்ள பேரின்ப நிலையெனவே இதனைக் கருதல் வேண்டும். பார்க்குமிடமெங்குமொரு நீக்க மற நிறைந்து நிற்கும் பிரமம் இந்நிலையிலேயே எய்தப்பெறும்.

7. குருவின் உபதேசப்படி முதலில் ஒருவன் “ஓம்” என்னும் பிரணவ எழுத்துக்களில் தியானம் செய்தல் வேண்டும். பின் எழுத்துக்களின்றி “ஓம்” என்னும் பிரணவத் தியானஞ் செய்தல் வேண்டும். இறுதியாக இம்மந்திரத் தியானத்தில் அனுபூதி பெற்று பிரபஞ்சம் முழுவதும் பெயரும் வடிவும் அற்று மனம் வாக்குக்கெட்டாத பரிபூரண வஸ்து ஒன்றே உனது என அறிதல் வேண்டும்.

8. குறைவொன்றுமற்ற, சந்தேகமற்ற நிஷ்களமற்றவொன்றே பிரமம். நாமே ‘பிரம்மம்’ என்பதை உணர்ந்த ஒருவன் உண்மையிற் பிரமமாகின்றான்.

9. ஐயத்துக்காளாகாத, அநாதியான காரண காரியங்கடந்த, உவமிக்கவொண்ணாதது எதுவோ அதுவே பிரமம். அதனை அறிந்தவனே விடுதலையடைகின்றான்.

10. மனம்அடக்கப்படவுமில்லை. போனபோன வழியிற் செலுத்தப்படவுமில்லை; பந்தமுற்றவனுமில்லை, வணங்குபவனுமில்லை. விடுதலையை நாடுகிறவனுமில்லை, விடுதலையை அடைந்தவனுமில்லை என்பதை அறிதலே பரமார்த்தமாகும்.

11. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியாகிய மூன்று நிலைகளிலும் இருக்கும் ஆன்மா ஒன்றே என அறிபவன். அந்த மூன்று நிலைகளையும் கடந்தவன். அவனுக்கு மறுபிறப்பில்லை.

12. பரமான்மா எல்லாரிடத்தும் உளது. சந்திரன் ஒன்றேயாயினும் எவ்வாறு நீரில் பலபோலத் தோன்றுகின்றதோ அஃதேபோல, ஒன்றேயாயினும் தோற்றங்கள் பலப்பல.

13. எவ்வாறு ஓரிடத்திருந்து வேறோரிடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட குடம் இடம் மாறியிருப்பினும் அதனுள்ளிருக்கும் ஆகாயம் மாற்றமுறாதுளதோ அவ்வாறே உடலிலுள்ள ஆன்மாவும் மாற்ற முறுவதில்லை.

14. குடங்கள் உடைவதுபோல் உடற் தோற்றங்கள் இல்லாது போயினும் ஆகாசம் போன்று ஆன்மா மாற்ற முறாது.

15. மாயையினால் மூடப்பட்ட ஆன்மா அஞ்ஞானத்தினால் தன்னையறிவதில்லை. அஞ்ஞானம் பிளக்கப்பட்டதும் அதுதானே யாவும் என்ற உண்மையை உணரும்.

16. ஓம் என்னும் ஒரு மொழி பரப்பிரமமாகவே கருதப்படும். பின் மொழியுணர்ச்சி அற்றபோது அழியாத பிரமமேநிறைந்திருக்கும். ஆன்மசாந்தியை விரும்பும் அறிஞன் அழியாத தன்மையுடைய பிரமத்தைத் தியானிக்க வேண்டும்.

17. பரவித்தை அபரவித்தை என வித்தை இருவகைப்படும். அபர வித்தையை அறிந்து கடந்தவன் பரவித்தையை அறிகிறான்.

18. அரிசியை வேண்டியவன் உமியை அகற்றுவது போன்று உண்மை ஞானத்தை விரும்பும் விவேகி ஒரு நிலையில்கற்ற வேதங்களையும்கழற்றியே விடுவான்.

19. பசுக்கள் பலநிறமுடையன. ஆயினும் பால் நிறம் வெள்ளையே. விவேகி ஞானத்தைப் பாலாகவும் வேதங்களையும், சாகைகளையும் நிறப்பசுக்களாகவும் பாவிக்க வேண்டும்.

20. பாலிற்படு நெய்போல் சுத்த அறிவு எல்லா உயிர்களிடத்தும் மறைந்திருக்கிறது. இடைவிடாது கடைந்து நெய்யைப் பெறுதல் போன்று மனமாகிய மத்தினால் இடைவிடாது கடைந்து நெய்யாகிய அறிவைப் பெறு தல் வேண்டும்.

21. தீக்கடை கோலினால் கடைந்து தீ பெறப்படுவது போன்று உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்து சீவனே சிவன் என்றும் பிரிவற்ற, அழியாத உப சாந்தமுள்ள பொருளென்றும், அனுபூதியில் அறிதல் வேண்டும்.

22. எல்லாவற்றுள்ளும் இருப்பது யார், யாரிடத்து எல்லாப் பொருளும் உளது, யார் யாண்டும் அருள் பாலிப்பவர், அவரே யாம், அந்தப் பரம பதமேயாம், இவ்வுலகின் உயிரேயது, அதுவே பரமபதம்.”

ஓம் தத் சத் ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாம் கடவுளை ஒருபோதும் மறந்திருக்க முடியாது!

**1. சுவாமி வாக்கு**

நற்சிந்தனைத் திருநூலின் இரண்டாம் பகுதியாக உரைநடைப் பகுதித் திரட்டு உளது. இத்திரட்டின் முதலாவது உரைநடையின் முதற் பந்தியின் முடிந்த மொழியையே இக்கட்டுரைத் தலையங்கம் சூடியுளது. இப்பந்தி மேல்வருவது.

"நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே
ஆகையால் நாம் அவருடைய உடைமை
அவருடைய அடிமை
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது"

நமது அசைவெல்லாம் கடவுளது அசைவாய் இருப்பதால் நமது நினைவுக்கு வித்தும் அவரே. நமது எண்ணந் தோன்றுமிடத்தில் அவரது எண்ணமே நமக்கு இருக்கிறது. நினைவில் நினைவாயிருப்பவனை நினைவு எவ்வாறு மறக்கும்? ஆதலால் அவரை மறக்க முடியாது.

இத்துடன் நற்சிந்தனையின் மூன்றாம் பகுதியாக உள்ள திருமுகங்கள் சிலவற்றுக்கு யோகசுவாமிகள் பொறித்துள்ள கையெழுத்துக்களையும் உற்று நோக்குதல் நன்று. இக்கையெழுத்துக்களிற் சில என்றும் மறவாதவன் எனவும் ஒன்று ஒருநாளும் மறவாத யோகசுவாமி என்றும் உள்ளன. சுவாமிகள் தமது உண்மை இயல்பை அடையாளப்படுத்தும் முகமாகவே இவ்வாறு கையெழுத்திட்டிருக்கிறார் என்பது தெளிவு. கடவுளை ஒருபோதும் மறவாதிருப்பதே அவரது இயல்பான நிலை என்பது திடமாகும். ஆகவே சுவாமிகள் தமது சுவானுபவமாயுணர்ந்த உண்மையைத் தருக்க ரீதியாகக் கூறியதே கடவுளை நாம் ஒருபோதும் மறக்க முடியாது எனும் இவ்வாசகமாகும்.

**2. மறவாமையும் தெய்வத்துவமும்**

கடவுளை ஒருபோதும் மறவாத நாம் கடவுளின் முன்னிலையிலே இருக்கிறோம். தேவ சன்னிதானத்தில் இருக்கும் நமக்குத் தேவனின் சாயலே அமைகிறது. இறைவன் குறைவிலா நிறைவினன். பரிபூரணன். அவனைச் சார்ந்திருக்கும் நாமும் ஒரு குறைவும் இல்லாதவராயிருக்கிறோம். அவர் என்றுமுள்ளவர். அவர் என்றோ அன்றே நாமும் உள்ளோம். ஆதலால் நாம் என்றுமுள்ளோம். சிவபெருமான் செறிவொழியாது நிற்பவர். அவரது திருமுன்னிலையில் இருக்கும் நாமும் எங்கும் இருக்கிறோம். அவர் எல்லாம் அறிந்தவர். நாமும் எல்லாம் அறிந்தவராக உள்ளோம். இதனை முன் குறிப்பிட்டுள்ள திருமுகப் பகுதியிலே 'மறக்க முடியாது' என்பதைத் தொடர்ந்து வரும் மொழிகள் குறிப்பிடுகின்றன.

நமக்கு ஒரு குறைவும் இல்லை
நாம் என்றும் உள்ளோம்
எங்கும் இருக்கிறோம்
எல்லாம் அறிவோம்.

ஈதெல்லாம் நமது தெய்வீக இயல்புகள். நாம் பரிசுத்தராகவும் தெய்வத்துள் வைக்கப்பட்டவர்களாகவும் உள்ளோம். இதுவே நமது உண்மைச் சுபாவம்.

**3. உண்மை சுபாவமும் சித்த விகாரக் கலக்கமும்**

தெய்வத்துவம் நமது உண்மைச் சுபாவமேயாம். அந்தரங்கத்தில் தூய எண்ணங்களே ஊறுகிறது. அந்தத் தூய எண்ணம் புலன்வழிச்செல்லும் அழுக்கு மனத்தின் நினைவாகும் போது இயல் பழிந்து விடுகிறது. கடவுட் சார்பு நீங்கி உலகச் சார்பு வந்து விடுகிறது. உலகபோகங்களில் ஏற்படும் ஆசையும் ஆசையால் விளையும் அவல நினைவுகளும் அலை அலையாய் எழுகின்றன. பிறப்பு இறப்பு இளமை முதுமை இன்பம் துன்பம் ஆதிய நினைவு மூட்டம் சூழ்கிறது. இவையெல்லாம் நமது உண்மைச் சுபாவம் அல்ல. இவையெல்லாம் மனவயப்பட்டவை. இவை ஊறித்திரண்டு உறுதி பெற்று சித்த விகாரக் கலக்கங்களாக மயக்கம் செய்கின்றன. ஆயினும் நமது உண்மைச் சுபாவம் ஆழமானது. பசுபிக் சமுத்திரத்தின் மரியானா ஆழி போன்று மிக்க ஆழமான அந்தரங்கமாக உள்ளது. மனோவிகாரங்கள் கடலின் மேற்பரப்பில் தோன்றுவனவே. அலைகள் எத்துணைப் பேரலைகளாக எழினும், புயல்களில் கொந்தளிப்பாக இருந்த போதும் இவையெல்லாம் மேற்றோல் தடிப்பினவே. ஆழக்கடலோ மிகவும் ஆழ்ந்தகன்றது. அதனை இந்த அலைகள் தாக்க மாட்டா. ஆழ்கடலின் பவளப் பாறைகளில் சிறுபூண்டும் பங்கமின்றி வளரும். அழகிய பூக்களை பூக்கும். சிறிய பல வர்ணத்தினவான தங்க மீன்கள் விளையாடும். அவ்வாறே மனத்தில் காமக் குரோத மோகங்கள் முனைத்து நின்றாலும் ஆழ்ந்த அகத்தில் இறைவனின் சகல கல்யாண குணங்கள் பற்றிய இனிய நினைவுகள் இன்பம் செய்து கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. உண்மைச் சுபாவத்தில் இருத்தலும்**

**சித்த விகாரங்களைச் சாட்சியாகப் பார்த்தலும்**

அறிவாளிகள் உண்மைச் சுபாவத்தில் உறுதியுற்றிருப்பார்கள். அவர்களது உள்ளகம் எப்போதும் சாந்தமாகவே இருக்கும். அவர்கள் சச்சிதானந்தப் பொருள் சுரக்கும் உண்மை இன்பத்தைச் சுகித்துக் கொண்டிருப்பார்கள். இன்பசாகரமோனத்தில் இருந்தபடியே இருப்பார்கள். இந்த இருப்பினின்றும் சற்றும் தளர மாட்டார்கள். இவர்கள் குணமெனும் குன்றேறி நிற்பார்கள். நின்ற நிலையின்றும் கணமேனும் சலியார். இப்படிச் சலியாமல் இருந்த வண்ணமே மண்ணிலே வாய்த்த வாழ்க்கையை வாழ்வார்கள். வாழ்வில் நிகழும் இன்ப துன்ப மாயையைப் பார்த்து எள்ளளவும் கலங்கார். இவர்கள் இடரினும் தளரினும் சாவினும் வாழ்விலும் ஈசன் இணையடி நிழலில் இன்புற்று வாழ்வர். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகமசர் "சியாமா பதே ஆஸ் (சியாமளா தேவியின் பாதத்தில் ஆத்மா) நதிர்தீரே வாஸ்" (ஆற்றங்கரையில் வாழ்க்கை) எனப் பாடி மகிழ்வாராம். எங்கள் யோகசுவாமிகளது திருமுகமொன்று "இருந்து - பார்க்கும்" இந்த இனிய அநுபூதியை மேல்வருமாறு சித்தரிக்கிறது.

**உனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நாங்களெல்லாம் தேவ சந்நிதானத்தில் இருக்கிறோம். இது ஒரு பெரும் சத்தியம். யாவும் இருந்தபடியே நடந்து வருகின்றது. கிலேசமோ, அன்போ, பகையோ இவை யாவும் பகவானுடைய விளையாட்டு. இவை என்றும் இப்படியே. நாமும் அப்படியே. பிறப்பைப் போல இறப்பு. புகழைப் போல இகழ். நன்மையைப் போலத் தீமை. முழுதும் உண்மை. முன்னிலை இன்றித் தன்னிலையில் யாவும். இயங்காமல் இயங்கு. முடிவைக் காணோம்.**
**அதுதான்**
**சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை.**

**என்றும் மறவாதவன்**

சுவாமிகள் 'ஒரு பெரும் சத்தியத்தை' மருந்து போல் வடித்தெடுத்துப் பயிலும் தமிழில் எளிதாகக் கூறியிருக்கிறார். நாம் தேவசந்நிதானத்தில் இருக்கிறோம். (வெளியிலே) யாவும் நடந்து வருகிறது. இருப்பும் நடப்பும் என்றும் இப்படியே தான் உளது. பகவான் இருக்கிறார். யாவும் அவர் விளையாட்டு. நாமும் அவர் சந்நிதானத்தில் இருக்கிறோம். அவர் நமக்குத் தந்த பாத்திரத்திற்கேற்ப ஆடுகிறோம். இருந்தபடியே இருக்கிறோம் பொருந்திய வண்ணம் வாழ்கிறோம்.

**5. இயங்காமல் இயங்கு**

இத்திருமுகம் தொடங்கும் போது 'தேவ சந்நிதானம்' எனத் தொடங்கியது. முடியும் போதோ முன்னிலையை இல்லாமற் செய்கிறது. தேவனின் தன்னிலையிலே யாவும் நடைபெறுகிறது. ஆகவே நாம் இறைவனின் வேறாக இறைவனின் முன்னிலையில் இல்லை. இறைவனின் வேறாகாமல் இறைவனுக்குள்ளேயே உள்ளோம். இதனையும் சுவாமியின் திருவாசகம் ஒன்றையே கூறி ஆப்பு அடித்தாற் போற் பதித்து உறுதி செய்யலாம்.

**"நாங்கள் பரிசுத்தரும் தெய்வத்துவத்துள் வைக்கப் பட்டவர்களாகவும் இருக்கிறோம்."**

இத்திருமுகத்திலே இதனை வாசிக்கும் மறவாது இருக்க நாடும் அடியவனுக்குச் சுவாமிகள் கூறும் சேதி இயங்காமல் இயங்கு என்பது. "இத் தன்னிலையிலே ஆடும் திருநடனத்தின் முடிவு காண்டற்கரியதாயுள்ளது. அது 'வர வரப் பார்ப்பதாக உளது" என நாம் அமைதியுறலாம். இத்திருமுகத்தின் தனியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் வாசகம் யாழ்ப் பாணத்துப் பயிலும் மொழியில் உளது. அதுதான் "சுற்றிச் சுற்றி சுப்பருடைய கொல்லை" என்பது (இங்கு சுப்பர் சுப்பிரமணியசுவாமியையும் குறிக்கும்)

**6. மறவாதிரு சாட்சியாகப்பார்**

எங்கும் சுப்பருடைய தோட்டந்தான் உளது. அதில் அவர் பண்படுத்துகிறார். பயிர் நடுகிறார். பயிர்களின் வளர்ச்சி கண்டு மகிழ்கிறார். விளைவினைக் காட்டுகிறார். பின்னர் மறுபோகம் செய்கிறார். யாவும் அவருடைய வேலை. இந்த உருவகத்தால் சுவாமி கூறுவதை நாம் மேல்வருமாறு உள்ள அருள்மொழியில் விளங்கிக் கொள்ளலாம்.

**"இறைவனே எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார். சுப்பிரமணியக் கடவுளின் பன்னிரண்டு கரங்களும் தொழிற்படுகின்றன. ஒவ்வொரு கரமும் ஒவ்வோர் கிருத்தியத்தைச் செய்கின்றது. கடவுள் சிரிக்கின்றார், அழுகின்றார், கொல்கின்றார். அவர் எண்ணற்ற செயல்களைச் செய்கின்றார். அவர் பெருமையை அறிவதும் கஷ்டம். அதனிலும் அரிது அறிந்த பெருமையை எடுத்து எவர்க்கும் விளங்க வைத்தல்."**

ஆகவே எல்லாம் ஈசன் செயல். நாம் அவரை ஒருபோதும் மறக்க முடியாது. வாழ்வில் நடப்பவற்றைச் சாட்சியாயிருந்து பார்க்க வேண்டியதே. சூட்சியைத் தொடு, சாட்சியை அடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைத் தீபம்

16 NOV 2024

## தொல் கார்த்திகை நாள்

திருஞானசம்பந்த சுவாமிகள் கார்த்திகை நாளில் கொண்டாடப்படும் விளக்கீடு பற்றிக் குறித்துள்ள தேவாரம் ஒன்று உள்ளது. பூம்பாவைத் திருப் பதிகத்திலுள்ள அத்தேவாரம் மேல்வருமாறு:

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலிச் சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்

இத்தேவாரத்திலே கார்த்திகை விளக்கீடு தொன் மைச் சிறப்புடையது என்ற குறிப்புள்ளமை கவனத்திற்குரியதாகும். சம்பந்தப் பிள்ளையாரது காலத்திலேயே தொன்மையான விழாவாகப் போற்றப் பட்டமைக்கமைய சங்கச் சான்றோர் செய்யுட்களிலும் விளக்கீடு பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அச்செய்யுட்கள் சிலவற்றில் மரங்கள் இலையில்லாத வண்ணம் மலர்ந்திருக்கும் மலர்ப் பொலிவைக் காட்டக் கார்த்திகை நாளில் ஏற்றப்பட்ட தீப வரிசை உவமையாகக் கூறப் பெற்றிருக்கிறது. மேல்வருவது அத்தகைய ஒரு உவமையாகும்.

'அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல் சுடர் நெடுங் கொடி போலப்
பல் பூங் கோங்கம் அணிந்த காடே'

இச்செய்யுளிலே சிவந்த கோங்க மலர்கள் பூத்துத் திகழும் பொலிவு கார்த்திகை விழாநாளில் ஏற்றப் பெற்ற விளக்கு வரிசைகளை ஒத்திருந்தமை கூறப் பெற்றிருக்கிறது. இவ்வண்ணம் சான்றோர் செய்யுட்களில் கார்த்திகை விளக்கீடு உவமான மாகக் கையாளப் பட்டிருந்தமையால் பண்டைக் காலத்திலே அது மக்கள் மனதில் நன்கு பதிந்தி ருந்தது என்பது தெளிவு. குன்றின் மேலிட்ட விளக்கு என்னும் பழமொழியும் கார்த்திகை விளக் கீட்டோடு தொடர்புடையதொன்றே. அண்ணா மலையிலே கார்த்திகை நாளில் ஏற்றப்படும் பெருவிளக்கு தொலைதூரத்திலுள்ள ஊரவர் களாலும் பக்தியோடு கண்டுகளித்ததிற் குரியதாக இருந்தமையால் இப்பழமொழி உருவானது.

## சைவமக்களின் உணர்வில் ஊறிய பெருவிழா

தொன்மைச் சிறப்புடைய இப்பெருவிழா வானது நம்மவரது உணர்வோடு ஒன்றிவிட்ட தொன் றெனவே தோன்றுகின்றது. நம்மவரது இல் லங்களிலே இந்த நன்னாளில் ஏற்றுவதற்கான அகல் விளக்குகள் பேணப்பட்டு வருகின்றன. மகளிரும் சிறுவரும் வளர்ந்தோரும் இல்லங் களிலே தீப வரிசை ஏற்றுவதில் மகிழ்ச்சியோடு ஈடுபடுவர். கோயில்கள் தோறும் சொக்கப் பனை எரித்தல் எனும் கைங்கரியம் மேற்கொள்ளப்படு கிறது. எழிற்சுடரான சொக்கப்பனைக் காட்டும் கிரியையே அக்கைங்கரியமாகும். (சொக்கநாதன் - சிவபிரான்) கார்த்திகை நாள் அன்று அண்ணா மலையில் அனுட்டிக்கப்படும் திருவிழா பாரதத் திற் கொண்டாடப்படும் பெருவிழாக்களுள் ஒன்றாகும்.

மலை உச்சியிலே மட்குடங்கள் பலவற்றில் நிறைத்து வைத்திருக்கும் நெய்யினைச் சொரிந்து "யார்" கணக்கான துணிகளை இட்டு எழுப்பும் சோதி பதினொரு நாட்கள் பலமைல் தூரங்களுக்குத் தெரியும் வண்ணம் சோதிப்பிழம்பாய் ஒளிகாலும். தீபம் ஏற்றப்படும் போது மலையெங்கணுமிருந்தும் அருகிலும் தொலைவிலுமுள்ள ஊர்களிலிருந்தும் எழும் அரகர ஒலியானது கடலொலிபோல் ஒலிக்கும். தொலைவில் நின்று தரிசிப்போருக்கு செஞ்சுடர்ச் சோதியான அண்ணாமலை விளக்கும் வெண்ணிலவு காலும் முழுமதியும் அருகருகே தோன்றுவது செங்கமல மலர் அருகே வெள்ளைச் சிறகன்னம் உள்ளது போல் தோன்றும்.

## விளக்கீட்டு விழாவின் வரலாறு

இவ்வண்ணம் தொன்றுதொட்டு சைவ நன்மக்கள் பலராலும் இல்லங்களில் விளக்கிட்டும் கோயில் களில் சொக்கப்பனின் எழிற்சுடர் காட்டியும், அண்ணாமலையில் பெருவிளக் கெடுத்தும் அநுட்டிக்கும் இக்கார்த்திகை விளக்கீட்டின் விளக்கமாயமைவது அருணாசலப் புராணமாகும். இப்புராணத்திலேயே விளக்கீட்டுப் பெருவிழா தோன்றிய வரலாறு நயம்படக் கூறப் பெற்றிருக் கிறது. அயனும் அரியும் அடிமுடிதேடிய அவ் வரலாறு அனைவரும் அறிந்ததொன்றே.

அயனும் அரியும் சோதி சொரூபத்தின் அடிமுடி அறியும் அகந்தை கொண்டு எங்கும் தேடியும் காண முடியாது சோர்ந்தனர். ஈற்றில் பெருமானைப் போற்றி பேரருளுக்காளாயினர். அவர்களுக்கு அருள் சொரிந்த பெருமான் அவர்கள் காணுமாறு அப்பெருஞ்சோதியைக் குறுக்கி ஒரு மலையாகி நின்றனர். அச்சோதி மலையின் சுடரைப் பார்க்க இயலாத அரியும் அயனும் பெருமானே!

"விண்ணவர்க்கும் எங்களுக்கும் இதன் சோதிக்கு
எதிர் குறுகி விழிக்கப் போகாது
எண்ணரியசுடர்களெல்லாம் உள்கரந்த
மலையாக இருக்க" என்றார்

அவ்வண்ணமே பெருமானும் அருணாசல மலை யாக அமர்ந்தார். ஆயினும் அச்சோதி சொரூப தரி சனத்தின் நலத்தினை நினைந்த இருவரும் மலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யுச்சியிலே "ஒருசோதி அநுதினமும் தெரிய அருள் செய்வாய்" என வேண்டினர். அவ்வேண்டுதலுக்கு இரங்கிய இறைவன்

"கார்த்திகைக்குக் கார்த்திகை நாள் ஒருசோதி
மலைநுனியில் காட்டா நிற்போம்"

என்று அருளினார். இவ்வண்ணம் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியானவர் கார்த்திகை முழுமதி நாளில் காட்டும் ஒப்பற்ற ஒரு சோதியே நாம் அநுட்டிக்கும் கார்த்திகை விளக்கீட்டு விழாவாகும்.

**விளக்கீட்டு விழாவின் தத்துவம்**

தொன்மைக் காலம் தொட்டு ஒளிவிளக்கேற்றிக் கொண்டாடப்படுவதும், அடிமுடி தேடிய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதுமான இக் கார்த்திகை விளக்கீட்டின் உள்ளீடாக அரிய தத்துவ உண்மைகள் பல உள்ளன. அவற்றுட் சில மேல்வருமாறு:

1. இன்னதன்மையன் இவன் என எவரும் இசைக்க வொண்ணாத பெருமையை உடையவன் இறைவன். இவ்விறைவன் கோலங்கொள்ளும் போது முதலிற் கொள்ளும் கோலம் சோதி வடிவமே.

2. இச்சோதி வடிவமும் படைத்தற் கடவுளான பிரமதேவனாலும் காத்தற் கடவுளான விட்டுணு வாலும் கூட முற்றும் அறியொணாததாகும்.

3. அகந்தை ஒளிந்தவிடத்தேயே இறைதரிசனம் வாய்ப்பதாகும். பிரமதேவன் முடியறியாது இளைத்துச் சோர்ந்து இறைவனைப் பணிந்து நிற்கும் தருணத்திலே "யான் முடியறிவேன் என அகந்தையுற்ற அப்பொழுதே எனது மேலான பதவியினின்றும் இழிந்து இழிபிறப்பான அன்னப் பறவையாய் விட்டேன்" எனத் தன் சிறுமையை உணர்ந்து உருகி நிற்பதாகச் சைவ எல்லப்ப நாவலர் பாடினார். மற்றோர் புலவரும் பிரம விட்டுணுக்கள் இருவரும் அடிமுடி அறியும் அகந்தையுற்ற அப்பொழுதே இழி பிறப்புக்களாய் மாறிவிட்டாரெனப் பாடுவார். இவ்வண்ணம் அகந்தையின் கேட்டையுணர்ந்து நான் கெட்டு நின்று போற்றும் போதே இறையருள் பெருகுவதாம்.

4. ரமணமகரிஷிகள் அன்னத்தைப் புத்தியாகவும், பன்றியை அகந்தையாகவும் கொண்டு அறிவு, தன் முனைப்பு என்பவற்றால் உண்மையை உண ரொணாது எனக் கூறுவர். எத்தகைய வல்லாளரும், காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே என்றாங்கு பெருமான்தரிசனம்தந்தபோது காணற்குரியதாகும்.

5. கார்த்திகைக்கு கார்த்திகை நாள் ஒரு சோதி காட்டுவது பெருமானின் எளிவந்த கருணைத்திறமாகும்.

**கார்த்திகை விளக்கீடு ஓர் கலங்கரை விளக்கம்:**

நாம் இல்லங்களில் ஏற்றும் அகல் விளக்கு, ஆலயங் களில் கொளுத்தும் 'சொக்கப்பன்' அண்ணாமலையிற் காட்டும் பெருவிளக்கம் ஆதிய எல்லாம்.

'அகல், திரி, நெய், தீ, ஆக்குவோர் இன்றியே
எழுந்த சக விளக்கு"

ஆய சோதிமலையையே உணர்த்தி நிற்பதாம். அருணாசலம் எனும் சொற்பொருளும் இதுவே. அருணம் என்பது உதயப்போதிலே கீழவானில் தோன்றும் செவ்வொளியைக் குறிப்பது. அசலம் என்பது சலனமற்று இருந்தபடியே இருப்பது. சோதிமயமாய் சலனமற்றிருப்பதே சிவசொரூபம். அதுவே நமது ஆன்ம சொரூபமுமாம். அருணாசலம் எனும் நாமத்தைக் கேட்டபோது பகவான் ரமணராகப் பரிணமித்த வேங்கடரமணனுக்குத் தோன்றியது இந்தச் சலனமற்றிருக்கும் சோதி சொரூபமே. இச் சோதி சொரூபதரிசனத்தில் விளைந்த சித்தத் தெளிவினாலே, இருந்த ஓரிரு சொந்தங்களையும் அவசரமாக முடித்துவிட்டுத் தம் மெய்த் தந்தை யிடம் செல்வதான ஒரு குறிப்பினை வீட்டாரின் கவனத்துக்கு வைத்துவிட்டு அருணாசலத்தை நோக்கி கிளம்பிவிட்டார் அவர். அருணாசலத்தை அடைந்த பின்னர் அவர் அதனை விட்டு வேறோரிடமும் சென்றதில்லை. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளின் பின் தம் தேகத்தை உகுத்த போது அந்த அரும் பெரும் சோதியின் ஒரு சுடரே தம் உண்மைச் சொரூபமென்பதற்கு அறிகுறியாக, எல்லோரும் காண மலையுச்சியை நோக்கிச் செல்லும் ஓர் ஒளிச் சுடர் காட்டினார். அண்ணாமலை விளக்கு ஆன்ம சொரூபத்தில் மாட்டி வைக்கும் ஓர் ஒளிவிளக்கு என்பதற்கான அண்மைக்காலச் சான்று இதுவாகும். பகவான் தம் அருளாடலாலே விளக்கம் செய்த செய்தியினையே மலையுச்சியில் ஒளிரும் கார்த்திகை விளக்கும் சொல்லாமற் சொல்கிறது. எங்கள் சுவாமிகளது கடைந்தெடுத்த அமுதத்தை ஒத்த நற்சிந்தனை இந்தச் சொல்லாமற் சொல்லும் செய்தியைத் தெளிந்த மொழிகளில் பொறித்து வைத்திருக்கிறது. அவை மேல்வருவன.

'ஆதியந்தமில்லை....
அதுவே நீ.....
சோதிமயம்....
சுட்டிறந்துநில்.....

இவ்வண்ணம் அகத்திருள் போக்கி பவக்கடல் கடந்து முத்திக்கரை சேர்த்தற்கு வழிகாட்டியாக இருப்பதாலே கார்த்திகை விளக்கை கலங்கரை விளக்கெனலே தகுவதாம்

"பவக்கடல் கடந்து முத்தியங்கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சைலனே கைலை நாயகனே! என்றே துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகளும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பக்தியும்

**74.** எமது அயலவரிடம் அன்பு செலுத்துவது பற்றி ஞானிகள் கூறுவதை இப்போது கேட்பாயாக; "நான் ஞானியின் அன்பு பற்றிக் கூறுகின்றேன். அது பற்றி நான் பொய் கூறவில்லை. எனது மனச்சாட்சியே அதற்குச் சான்றாகும். எனது இதயத்தில் பெருந்துன்பம் தொடர்கிறது. எனது சகோதரர்களுக்காக நான் துன்பப்பட வேண்டும்" இவ்வாறு ஞானிகள் அனைவரும் ஒரே விதமாகவே கூறுகின்றார்கள்.

**75.** புகழ், இன்பம், பண ஆசை உள்ளவன் கோபத்துக்கான நிகழ்ச்சிகளில் இருந்து விடுபட முடியாது. இவற்றில் இருந்தும் விலகாதவன் பூரண அன்பு நிலையைப் பெறமாட்டான்.

**76.** அடக்கமும், கடும் தவ வாழ்வும் எல்லாப் பாபங்களில் இருந்தும் மனிதனுக்கு விடுதலை அளிக்கும். உடல் இன்பங்களையும், சீவனின் தீவிர ஆசைகளையும் விலக்கிக் கொள்ளாதவனுக்கு எவ்வாறு விடுதலை கிடைக்கும்? ஞானி கடவுளைத் தொழும்போது மனிதரிடமிருந்து இவற்றை விலக்கிவிடு என்று கேட்பான். எனது அடக்கமும் தவமும் எமது பாவங்களை மன்னிக்குமாக.

**77.** பார்க்கக் கூடியனவும், பார்க்க முடியாததுமான விடயங்கள் பற்றியே போதனைகள் எல்லாம் கூறுகின்றன. அவை கடவுளைப் பற்றிய விடயங்களே. அவை இறைவன் எமக்கு அளித்துள்ள வசதிகளையும் இறைவனின் பெருமையையும் கூறுகின்றன.

**78.** இறை நியதிகளை மீறாவிடின் அவர் எம்மைத் தீவிர ஆசைகள் இல்லாதவராக ஆக்குவார். அவரது போதனைகள் எமக்கு ஆன்மீக அறிவு பற்றிய ஒளியைத் தரும்.

**79.** விரதம் புலனின்பங்களை விலக்கிவிடும் தானம் சீவனின் அகங்காரத்தைக் குணப்படுத்தும், தொழுகை அறிவைத் தூய்மைப்படுத்தும். அது ஏனைய உயிரினங்களைப் பற்றிச் சிந்திக்க ஒருவரைத் தயார்ப்படுத்தும். இறைவனின் நியதிகள் சீவனின் அகங்காரங்களை நீக்குவது பற்றியன ஆகும்.

**80.** எனது இதயம் இளகியதாயும், அடக்கமுடையதாகவும் இருப்பதில் இருந்து நீ கற்றுக்கொள். இளகிய இதயம் சீவனின் அகங்காரத்தை அமைதிப்படுத்தும். அடக்கம் ஒருவரைக் கர்வத்தில் இருந்தும் தற்பெருமையில் இருந்தும் விடுவிக்கும்.

**81.** கடவுளுக்குப் பயப்படுவது இரண்டு வகையில் அடங்கும். ஒருவகை, தண்டனைக்குப் பயப்படுவதாகும் இவ்வகைப் பயம் சுயகட்டுப்பாடு, பொறுமை, தன்னடக்கம், கடவுள் நம்பிக்கை என்பவற்றை வளர்க்கக் கூடியது. சாந்தமான மனநிலையில் இருந்து அன்பு வந்து சேருகின்றது. இரண்டாவது வகையான பயம் அன்போடு தொடர்புடையது. அது ஆன்மாவைப் பெருமைப்படுத்துகிறது. கடவுளோடு அன்பினால் கலந்துகொள்வது சாந்த நிலையை வளர்க்கிறது.

**82.** உன்னிடத்திலுள்ள உலக ரீதியான ஒழுங்கின்மை, தூய்மையின்மை, தீவிர ஆசை, கெட்ட ஆசை, பேராசை என்பவற்றைக் கொன்றுவிடு. இங்கு உலக ரீதி என்பது உடலின்பங்களைக் குறிக்கும். ஒழுக்கமின்மை என்பது பாபம் செய்வதைக் குறிக்கும். தீவிர ஆசை என்பது ஆசை பற்றிய தீவிர எண்ணங்கள் ஆகும். கெட்ட ஆசை என்பது ஆசை எண்ணங்களுக்கு இடமளிப்பதைக் குறிக்கும். பேராசை என்பது தீவிர ஆசைகளை உருவாக்கி அவற்றை அதிகரிப்பதாகும். இவை யாவும் உடலின் பங்களே.

**84.** முதலில் ஞாபகம் அறிவுக்குள் சில பற்றற்ற எண்ணங்களைக் கொண்டு வருகிறது. அவையே தொடரும்போது பற்று உருவாக்கப்படுகின்றது. இது அதிகரிப்பதற்கு ஒரு தடவை இடம் அளித்தால் அப்போது பாபம் செய்யப்படுகிறது. எனவே பாவம் செய்வதை முதலில் நிறுத்த வேண்டும். பின்னர் அதற்கான மூல காரணத்தைப் படிப்படியாக அறிய வேண்டும். பேராசையே அதற்கான மூல காரணமாகும். அந்த மூல காரணமே பற்றை உருவாக்கி அதனை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. இந்த இடத்தில் பேராசை என்பதற்குப் பெரும் தீனி எனப் பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒழுக்கமின்மையின் தாயும், தாதியும் பேராசை ஆதலினால் என்க. உடைமையைப் பொறுத்த வரையில் பேராசை பாபம் மட்டுமன்றி உணவைப் பொறுத்த வரையிலும் அது பாவமாகும். எனவே இதனால் உணவு, உடைமை என்ற இரண்டிலும் சுயகட்டுப்பாடு வேண்டும்.

**85.** ஒரு குருவியை அதன் காலில் நூலால் கட்டி வைத்தால் அது பறக்க முயற்சி செய்யும். அதற்கு அந்த நூல் இடமளிக்காது. எனவே அது பறக்க முயற்சிக்கும் போது விழுந்துவிடும். இதேபோல அறிவு பற்றற்ற நிலையை அடையாதபோது உயர்ந்த ஞானத்தைப் பெற முயன்றாலும் அது உயர முடியாமல் மீண்டும் உலக ரீதியான அறிவுக்கே திரும்பிவிடும்.

**86.** பற்றில் இருந்து அறிவு முற்றாக விடுபடும்போது கவனம் வேறு விடயங்களில் செல்லாது ஏனைய உயிர்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்கிறது. அது உயர் ஞானத்தை நோக்கிச் செல்ல வழிவகுக்கின்றது.

**87.** அறிவு தூய நிலையில் இருக்கும்போது பொருள்களின் உண்மைக் கருத்தைப் பெற அவ்வறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ரீதியில் அப்பொருள்களைச் சிந்திக்கத் தொடங்குகின்றது. இவ்வாறு நிகழும் போது பற்றிலிருந்து விடுபட முடிகிறது. ஆனால் சாதாரண மனிதரோடு சம்பந்தப்பட்ட எண்ணங் களைப் பொருள்களின் கருத்து உண்டாக்குமாயின் அவ்வறிவு வெட்கப்பட வேண்டியதாகவும், கெட்ட தாகவும் மாறுகிறது.

88. பிரார்த்தனையின்போது உனது அறிவைத் திசை திருப்பினால் உலகப் பொருள்களின் கருத்துக்கள் எதுவும் தோன்றாது. பின்னர் நீ பற்றற்ற நிலையில் இருக்கின்றாய் என்பதை அறிந்து கொள்வாய்.

89. ஆன்மா தனது ஆரோக்கியத்தை உணர ஆரம் பித்ததும் பொருள்கள் தொடர்பான கருத்தானது பற்றிலிருந்து விடுதலை, அமைதி என்பவற்றைப் பெறுகிறது.

90. புறக்கண்கள் தாம் காணும் அழகான பொருள்களால் கவரப்படுகின்றன. இதேபோலத் தூ ய அறிவு பார்க்க முடியாத சூக்குமப் பொருள்களின் உயர் ஞானத்தால் கவரப்படுகின்றது.

91. சடப்பொருள்களில் எவ்வித பற்றையும் உரு வாக்கக் கூடாது. அவ்வாறான பொருள்களின் கருத்து மனதில் வரும்போது பற்றற்றிருக்க வேண்டி யது மிகவும் அவசியம். பிசாசுகள் எம்மோடு யுத்தம் புரிவது பொருள்களின் மூலம் ஆகும். அதனிலும் பார்க்கக் கொடிய யுத்தத்தை அவை எமது எண்ணங் களைக் கொண்டே செய்கின்றன.

92. விழுமியங்களைப் பெறுவதில் வெற்றி பெறுப வனும், ஆன்மீக அறிவை நிரம்பப் பெற்றவனும் பொருள்களின் உண்மையான தன்மையைக் காண்கிறான். அதன் விளைவாக எல்லாப் பொருள்களாலும் மயக்கமடையாது அவற்றின் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதோடு அவை தொடர்பான செயல்களையும் அவன் மேற் கொள்வான். பொருள்களைச் சரியாக அல்லது தவறாக உபயோகிப்பதைப் பொறுத்தே நாம் நல்லவர்களாவதும் கெட்டவர்களாவதும் ஆகும்.

93. தொடர்ந்து இதயத்தில் பொருள்களின் உண்மை யான கருத்து எழுமாயின் நாம் பற்றிலிருந்து விடுபட்ட வராவோம். அப்போது நாம் உயர்ந்த பற்றற்ற நிலையைப் பெற்றுள்ளோம் என்பதை அறியலாம்.

94. அறிவின் நியதிகளை நிறைவேற்றுவதன் மூலம் பற்றுக்களைக் களைந்து கொள்ளலாம். தூலப் பொருள்களை ஆன்மீக ரீதியாகச் சிந்திப்பதன் மூலம் அவை பற்றிய கருத்துக்களில் இருந்து விடுதலை கிடைக்கின்றது. சூக்குமப் பொருள் களின் அறிவு மூலம் தூலப் பொருள்களின் எண்ணங்கள் விலக்கப்படுகின்றன. இறுதியாக இவை மூன்றினது அறிவின் மூலமாக ஞானம் தானே வெளியாகின்றது.

95. சூரியன் உதித்துப் பூமியில் வெளிச்சம் வரும் போது சூரியன் தன்னையும், தான் ஒளியூட்டிய பொருள்களையும் உணர்த்துகின்றது. இதேபோலத் தூய அறிவில் நல்லொழுக்க எண்ணங்கள் உதய மாகும்போது அவ்வொழுக்கம் தன்னையும் தனது சகல தத்துவங்களையும் வெளியே கொண்டு வருகின்றது.

96. கடவுளின் சாராம்சத்தில் இருந்து நாம் அவரை அறிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் அவரது பிரமாண்டமான படைப்பின் மூலமும் பிராணிகளுக்கு வேண்டியவற்றை எல்லாம் அவர் வழங்கி இருப்பதன் மூலமும் அவரை நாம் நன்றாக அறிகின்றோம். கண்ணாடி போன்ற இவற்றின் ஊடாக அவரது எல்லையற்ற நலன்கள், ஞானம், ஆற்றல் என்பவற்றின் தன்மையை நாமும் பெற்றுக் கொள்ள முடியும்.

97. தூய அறிவு மனித அலுவல்கள் பற்றிய பற்றற்ற கருத்தால் நிறைந்துள்ளது. அல்லது அது தூல சூக்குமப் பொருள்களின் இயல்பான சிந்தனையுள் நிறைந்திருக்கிறது. அல்லது அது அம் மூன்றின் ஒளியாலும் நிறைந்திருக்கிறது.

98. தூலப் பொருள்களைச் சிந்திப்பதில் மனம் ஈடு பட்டிருக்கும் போது அப்பொருள்களின் இயல்பான தத்துவங்களை அல்லது ஆன்மீகத் தத்துவங்களை அல்லது அவற்றின் மூலகாரணத்தைத் தேடுகின்றது.

99. தூலப் பொருள்களின் சிந்தனையில் அறிவு ஆழ்ந்தி ருக்கும்போது அவற்றின் இயல்பான தத்துவங்களையும் அவற்றின் தோற்றத்துக்கான காரணத்தையும் ஆராய் கிறது. அவ்வாய்வில் இருந்து எது வந்தாலும் மனிதரின் தேவைகளுக்கு வழங்கப்பட்டவையையும் அவை தொடர்பான மதிப்பீட்டையும் கூட அவ்வாய்வு உள்ளடக்குகின்றது.

100. அறிவு இறைவனில் நிலைப்படும்போது, அவரது சூக்கும தத்துவங்களைக் கண்டறிய அது ஆவலுறுகிறது. ஆனால் கடவுளின் ஆழ்ந்த சூக்கும இயல்பு அவ்வாறான ஆய்வுக்கு இடமளிப்பதில்லை. அவ்வியல்பு உண்மையில் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. அவரது இயல்பு தொடர்பான பண்புகள் அறிவின் விருப்பத்தால் அணுகக் கூடியதே. அதாவது கடவுளின் நிலையான தன்மை, எல்லையின்மை, துணிபுக்கு அடங்காமை, நலன் கள், ஞானம், படைப்பாற்றல், காப்பாற்றும் ஆற்றல், உயிர்களை மதிப்பிடும் ஆற்றல் முதலிய பண்புகளை அறிவால் அணுக முடியும். இவற்றுள் எல்லையற்ற தன்மையை முழுவதாக அறியலாம். எதையும் அறிய முடியாது என்ற உண்மை அறிவுக்கு அப்பாற்பட்டது என்பதைக் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவதொண்டன்

குரோதி வருடம் ஐப்பசி - கார்த்திகை

மலர் : 88 குரோதி - நவம்பர் - டிசெம்பர் 2024 இதழ் : 11-12

## கொளுத்தி எரிக்கும் யாகநாள்

### முகவுரை

"சிவதொண்டன் நிலையத்தில்
எல்லாரும் மௌனமாக இருந்து
உண்மையை உணர வேண்டும்"
-எங்கள் ஆசான் அருள்மொழிகள்

எங்கள் குருநாதன் மாந்தர் எல்லாரும் உண்மையை உணர வேண்டும் என்ற நோக்கத்தோடு சிவ தொண்டன் நிலையத்தை நிறுவினர். அன்பர்கள் சிவதொண்டன் நிலையத்திற் கூடி மௌனமாக இருந்து தியானஞ் செய்து உண்மையை உணர்ந்து உய்தி பெற வேண்டும் என்பது சுவாமிகளது திருவுள்ளம். இத் திருவுள்ளத்தை சுவாமிகள் ஓர் உறுதி மொழி யாக வெளிப்படுத்தியிருப்பதைப் பலரும் அறிவர்.

"சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்து கடைத்தேறீர்
மௌனமாயிருந் திளைப்பாறீர்
மந்திரம் இதுவெனக் குறியீர்"
-நற்சிந்தனை

இதுபற்றிய இன்னொரு மொழியும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இம்மொழி சுவாமிகள் சிவ தொண்டன் நிலையத்தைப் பார்க்கும் பணியில் அமர்த்திய செல்லத்துரை சுவாமிகளுக்குக் கூறிய மொழியாகும்.

" உண்மையைத் தேடி வருகிறவருக்குச்
சொல்ல வேண்டியது;
'வாரும், ஆறுதலாக அமரும்
நினைத்துப் பாரும் உண்மை
(கடவுள்) உம்மோடு கூட இருப்பதை அறிவீர்"
-எங்கள் ஆசான் அருள்மொழிகள்

### சுவாமிகள் யாகநாளை நியமஞ் செய்ததன் நோக்கம்

இவ்வண்ணம் உண்மையைத் தேடி வருபவர்கள் உண்மையை உணரும் பொருட்டுச் சுவாமிகள் ஏற்பாடு செய்து வைத்த ஒரு தவப்பொழுது யாக நாள் ஆகும். சுவாமிகள் மாதந்தோறும் வரும் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை யாக நாளாக நியமஞ் செய்தார். இந்த நாளிற் செய்யப்படும் யாகமாவது அந்தர் யாகம் ஆகும். அதாவது அகமாகிய ஓம குண்டத்திலே எண்ணங்களை எரித்துச் சத்திய சோதியை ஒளிரச் செய்வதாகும். இந்த யாகம் கடோபநிடதத்திற் கூறப்படும் "நசிகேத வித்தை"யை நிகர்த்தது. நசிகேதனுக்கு யமன் கூறிய ஞானவித்தையாதலால் இது நசிகேத வித்தை எனப்படுகிறது. யமதேவன் நசிகேதனுக்கு மற்றொரு பற்றுமில்லை என்பதனைச் சோதித்தறிந்த பின்னரே இவ்வித்தையை அவனுக்கு உபதேசித்தார். ஆதலினால் சத்திய காமர்கள் இயற்றுதற்குரிய வித்தையையே சுவாமிகள் சிவதொண்டன் நிலைய யாக நாளாக விதித்தனர் எனலாம். இந்த யாகநாளை அடியவர்கள் தவப்பொழுதாகக் கருதிச் சிரத்தையுடன் ஈடுபட்டு ஈடேற வேண்டும் என்பதற்காகச் சுவாமிகள் பலவாறான ஆடல்கள் புரிந்தனர். அவற்றுள் ஒன்று மேல்வருவது; ஒரு யாக நாள் - அன்பர்கள் தியான மண்டபத்தில் தியானத்தில் ஈடுபட்டிருந்தவேளை, சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தை ஒட்டிய வீதியிலே வருவது போவதாகத் திரிந்தனர். இடையிடையே 'நான் ஒரு காவல் நாய்' என உரத்துக் கூறியவண்ணம் உலவினர். இதன் மெய்ப் பொருளை நசிகேத வித்தை பயில்வாரே அறிவர். ஆயினும் சிவதொண்டன் நிலையத்தில் யாக சாதனையில் ஈடுபட்டிருக்கும் அடியவர்களுக்குச் சுவாமிகள் காப்பாக இருந்தருள்வார்' என்ற அளவிலாதல் நாம் இதற்குப் பொருள் கொள்ளலாம். சுவாமிகள் நடமாடித் திரிந்த காலத்தில் இந்த யாக நாளை அன்பர்கள் பத்தி சிரத்தையுடன் அநுட்டித்தனர். கொழும்பு முதலிய இடங்களில் உத்தியோகம் புரிந்தவர்களும் இந்த யாகநாளுக்கென யாழ்ப் பாணம் வந்து சேர்ந்தனர். அன்பர் சிலர் காலைப் பூசை வேளையிலேயே சிவதொண்டன் நிலையம் வந்து சேர்ந்தனர். காலை எட்டு மணிக்குக் காட்டப் பெறும் தீபதரிசனத்தைக் காண்பதற்காக விரதியர் பலரும் சேர்ந்துவிடுவர். சாயங்காலத் தீப தரிசனத்தின் பின்னரே வீடு செல்வர். நாள் முழுதும் அவர்களுக்குத் தவப்பொழுதாகவே அமையும். அவர்கள் தளர்ச்சியடையாது தவமியற்றுதற்கு ஊக்கமளித்தற் பொருட்டு இடையில் தேநீரும் நண்பகற் பூசையையொட்டிப் பிரசாதமும் வழங்கப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாகம் பற்றிச் சுவாமிகள் கூறிய அருள்மொழிகளை அறிவதன் அவசியம்

சுவாமிகள் திருவடிக் கலப்புற்ற பின்னரும் இம் முறையே தொடர்ந்து பேணப்பட்டது. இந்த நடைமுறையிற் பழக்கப்பட்ட சிலர் இன்று முதுமையடைந்தவர்களாக உள்ளனர். இவர்கள் உடல் தளர்வுற்ற நிலையிலும் சித்தநிலை கலங்காதவர்களாய் யாகத்தில் பங்கு கொள்கின்றனர். இவர்கள் யாகத்தில் ஈடுபடுவோர்க்கு முன்மாதிரியாக உள்ளனர். ஆயினும் இன்று யாகநாளின் முக்கியத்துவம் பற்றி எடுத் துரைக்க வேண்டியுள்ளது. இம்முக்கியத்துவத்தைச் சுவாமிகள் கூறிய அறிவுறுத்தல்களின் ஊடாக வலியுறுத்துதல் அவசியமாக உளது. இவ்வறிவுரைகள் எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்னும் திருநூலின் இரண்டாம் பகுதியிலுள்ளன. இவை சுவாமிகள் சிவதொண்டன் நிலையப் பார்வைக்காரருக்கு அருளிய மொழிகள். இம்மொழிகளிலே யாகத்தின் நோக்கம் யாக நாளின் போது சிவதொண்டன் நிலையத்திற் பொலியும் சுவாமிகளின் அருள், இவ்வருளுக்குப் பாத்திரராதற்குரிய விரதியரின் பக்குவம் ஆகியன கூறப்பெற்றிருக்கின்றன.

### யாகத்தின் நோக்கம்

"எல்லாருடனும் கடவுள் இருக்கிறார்;
மௌனமாக இருந்து பாருங்கள்
என்று யாக நாட்களில் வருகிறவர்களுக்குச் சொல்லு."

சிவதொண்டன் நிலையத்தைப் பார்க்கும் பணியில் ஈடுபட்டிருப்பவருடாக யோகசுவாமிகள் யாக நாட்களில் பங்கு பெற வருபவர்களுக்குக் கூறும் செய்தி இவ்வருள் மொழியில் உள்ளது. அதாவது யாகநாளில் கடவுளைப் பாருங்கள் எனச் சுவாமி சொல்கிறார். பார்ப்பதென்பதை அகமுகமாகி உணர்தல் என்பதே சுவாமிகளது கருத்து ஆதல் தெளிவு. இதுவே மனிதரின் உயர்வற உயர்ந்த நோக்கம் என்பதை ஆன்ம சாதகர் பலரும் அறிவர். ஆகவே அடியவர் பெரும்பேறு ஒன்றிற்காகவே யாக நாளில் பங்குபெற வருகின்றனர். அதன் பொருட்டு அவர்கள் செய்வது யாதெனின் மௌனமாக இருந்து பார்த்தல் ஆகும். அவ்வாறிருந்து தமது உயிருக்கு உயிராகக் கடவுள் இருப்பதை உணர்ந்து கொள்ள முயல்தலே யாகத்தின் நோக்கமாகும்.

### யாகம் செய்ய வேண்டிய முறை

'உபவாசமிருந்து, தியானம் செய்து
நாள் முழுதும் தவஞ்செய்து அல்லவா
யாகம் செய்ய வேண்டும்'

'உபவாசமிருந்து' என்பதால் யாகநாளை ஒரு விரதநாள் போன்று கருதுதல் வேண்டும் என்பது தெரிகிறது. 'தவஞ் செய்து' என்பதால் யாகநாள் ஒரு 'தவப்பொழுது' என்பது தெளிவு. 'தியானம் செய்து' என்பதால் ஒன்றிய சிந்தையராய் இருத்தல் வேண்டும் என்பது துணிவு. நாள் முழுவதும் என்பதால் அன்று காலை துயிலெழுந்தது முதல் துயிலச் செல்லும்வரை மறவாத சிந்தையராயிருத்தல் வேண்டும் எனக் கருதுதல் வேண்டும். அதாவது நண்பகல் பிரசாதம் அருந்திய பின் நூல்கள் வாசித்தல், அன்பருடன் கூடி சத்சங்கமாகப் போது போக்கல், இயன்ற தொண்டு தொழும்புகளில் ஈடுபடுதல் என்றவாறாக நாட் கழித்தல் நலமாகும். ஆகவே யாகநாள் தியான தவமானது உண்மையுணர்வை இடையறாது பேணுதலாகும்.

### யாகநாளில் பொங்கும் பேரருள்;

(ஒருயாக தினத்தில்) "உங்கள் எல்லாரையும்
இன்று கொளுத்தி எரிக்கப் போகிறேன்"

யாக நாளின் உயரிய நோக்கத்தை அறிந்து அன்றைய நாளைத் தவக்காலமாக அனுட்டிப்பவர்க்குச் சுவாமிகளது பேரருள் வாய்க்கின்றது. கொளுத்தி எரித்தல் என்பது அவநினைவுகளைப் போக்கிச் சிவசோதியைத் திகழச் செய்தலாகும். இதனை உண்மையுணர்ச்சியோடு யாகம் செய்வோருடன் கூட இருந்து சுவாமிகளே செய்கிறார். நன்றாக யோசித்துப் பார்த்தால் யாக சாதகர்களின் வேலை பயபக்தியுடன் வந்து சும்மா இருத்தலே அவர்களின் அழுக்குகளைப் போக்கிச் சோதி சொரூபமாய் விளங்கச் செய்வது சுவாமிகளின் அருட்செயலாகவே அமைகிறது. யாகநாளின் போது முழுமதிநாளில் கடல் பொங்குவது போல சுவமிகளின் பெருங்கருணை பரவுகின்றது. அது யாக சாதகர்களின் ஊழ்வினை போக்கி உள்ளொளி ஓங்கச் செய்கிறது.

### யாகதவம் மெய்யுணர்வை உண்டாக்கும்

"யாகத்தைப் பயபக்தியுடன் செய்யுங்கள்
அறிவுண்டாகும்."

இவ்வருள் மொழி யாகஞ் செய்வோர் பெறும் பயனைக் கூறுகின்றது. பெறும் பயனாவது அறிவு (மெய்யுணர்தல்) உண்டாவதாகும். இவ்வருள் மொழியில் 'பயம்' என்னும் ஒரு சொல் உளது. இப்பயம் ஆவது, நாள் முழுவதும் உபவாசமிருந்து தியானஞ் செய்து தவஞ் செய்வதாக யாகம் இருத்தல் வேண்டும் என்று சுவாமிகள் கூறியிருக்க நாம் நண்பகற் போதில் பூசை பார்த்தல் மட்டும் யாகம் எனக் கொள்வது பெரும் பழியும் பாவமும் எனக் கொள்வது முதலானவற்றால் ஏற்படும் பயமாகும். பக்தியாவது சுவாமிகளே 'நம்மைக் கொளுத்தி எரிக்கும் பெருங்கருணை புரிகின்றாரே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ

# நற்சிந்தனை

## சிவத்தியானம்

ஓ மனிதனே! நீ உண்மைப் பொருள், கேடற்றவன், உனக்கு ஒருவருங் கேடு விளைவிக்க முடியாது.

நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன்.

உறுதியுடனே சிங்கங் கானகத்தில் திரிவது போல் உலகமாகிய கானகத்தில் திரி. எந்த விதத்திலுந் தளர்வடையாதே. ஒரு நூதனமு மிங்கில்லை. முழுதுமுண்மை. ஒரு பொல்லாப்புமில்லை.

ஓ மனிதனே! வானம் வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சி செய்யக் கருதாதே. சாட்சியாயிரு. மாட்சி உன் பிறப்புரிமை.

அது என்ன வுபாயத்தாலு மடையப்படுவ தொன்றன்று. அப்படியுள்ள காரியம். மற்றனைத்துஞ் செப்படிவித்தை. அறிவு, அறியாமை உன்னிடமில்லை. நீ பரமாத்மா.

ஓம் தத் சத் ஓம்!!

ஓ மனிதனே! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீ யாரெனத் தெரிந்து கொள்வாய். துயருறத் தகாத காரியங்களில் துயருறாதே. துன்பமும் இன்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

உன்னை ஒன்றுந் தாக்க மாட்டாது. எழுந்திரு. விழித்துக்கொள். சிவத்தியானமென்னுந் திறவு கோலால் மோக்ஷவீட்டின் கதவைத் திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

ஓ நண்பனே! உன்னை யார் தான் பாவியென்று சொல்லவல்லான்?
ஏன்?
நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்து போனாய்.
ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமற் சொல்லு. உன் முழு மனத்தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக்கொடு. சிவத்தியானத்தை அசட்டை பண்ணாதே. ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும். சோம்பலுக்குஞ் சோம்பலின்மைக்கும் நீ கட்டுப்படாதே.

அதிகப் பேச்சில் என்ன பயன். பண்படுத்தப் பட்ட தரையிலன்றோ நல்ல பயன் வரும். அஞ்சாதே.

நாங்கள் சிவனடியார். சிவபெருமான் என்றுள்ளவரோ அன்று நாமுமுள்ளோம்.

வெப்பந் தட்பம், இன்பந் துன்பம், இளமை முதுமை இயற்கையின் குணங்கள்.

இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படுவான். இவைகள் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவதுமில்லை. மறைவதுமில்லை.

உண்மை இன்மையாகாது. இன்மை உண்மை யாகாது.

எல்லாஞ் சிவன் செயலென்ற எங்களுக்குக் குறைவுமுண்டோ? நிறைவுமுண்டோ? நாம் சிவபெருமானென்ற நூலிலே கோக்கப்பட்ட பல நிறமுள்ள மணிகளையொப்பவர். நூலறுவதுமில்லை. நாங்கள் சிதறிப்போவது மில்லை. பலபடக் கூறுவதால் பயனில்லை.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

ஓ சினேகிதா! நீ சிவனடியானென்று முழு மனத் தோடும் நினை. எல்லா வெற்றியுமுன்னிடமுண்டு. அதற்கு மேல் வேறொன்றுமில்லை. யாவு முன் காலடியில்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றால் ஏற்படுவதாகும். இவ்வாறு பயபக்தியுடன் யாகம் செய்பவர்க்கு ஞானம் உண்டாகும் என்று சுவாமிகள் உணர்த்தியிருக்கின்றார்.

**முடிவுரை**

சுவாமிகள் மாதந்தோறும் யாகநாளை நியமஞ் செய்ததன் முக்கியத்துவத்தையும் நோக்குதல் வேண்டியதாகும். யாகநாள் மாதத்தில் ஒரு நாளே. மற்றைய நாட்கள் யாவும் சாதகர் உலகச் சேற்றிலேயே உழல வேண்டும். யாகநாள் பயிற்சியைக் கொண்டு இவ்வழுக்குகளை ஒருவாறு போக்குதல் கூடும். ஆனால் அடியவர் பல "அவலக் கடலாய வெள்ளத்திலே மூழ்க வேண்டியிருக்கும். இவ்வவலத்தைப் போக்குவதற்குத் தொடர்ந்த யாக நாட்களின் அநுட்டானம் உதவியாயிருக்கும்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படுமென
வழுத்திய பெரியவன் மறைமொழி தன்னை
அழுத்த அழுத்த ஆனந்த ஈச்சுரன்
வழுத்தொணா மலரடி நாடி வாழ்வோமே
- நற்சிந்தனை

இந்நற்சிந்தனையிலே 'அழுத்த அழுத்த' என்ற அடுக்குமொழி மனதிற் பதிக்க வேண்டியதாகும். யாக, ஒழுக்கத்தையும் மாதாந்தம் அழுத்துதலே மலரடி நாட்டத்தைப் பெருக்கும். இவ்விடத்தில் சுவாமிகளது வாழ்க்கை உணர்த்தும் வழிகாட்டுதலொன்றை நினைவுபடுத்தல் நலம். சுவாமிகள் இரத்தினபுரியிலுள்ள ஓரன்பர் இல்லத்தில் சில நாட்கள் உறைந்தபோது கொழும்பிலிருந்து ஓர் அடியவரும் சென்று சுவாமிகளின் சன்னிதானத்தில் நாட்கழித்துக் கொழும்பு திரும்பினர். சில நாட்களின் பின் அவ்வடியவரைச் சுவாமிகள் சந்தித்தனர். அப்போது அவ்வடியவர் கவலையால் பீடிக்கப்பட்டிருந்தார். அவ்வடியவர்க்குச் சுவாமிகள் கூறிய அருள்மொழியாவது;

'நான் இரத்தினபுரியில் அபிடேகமாட்டிவிட
இப்போது ஏன் 'ஈ' (இழிவுபட்டு) என்று நிற்கிறாய்
இழிவைக் கழுவும் வழி அழுத்தி அழுத்தி இருத்தலே

ஆதலால் யாகநாள் மாதந்தோறும் பயபக்தியுடன் அனுட்டிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## சிந்தனைக்குரிய சிவமே

**பல்லவி**

சிந்தனைக் கரிய சிவமே - என்றுமென்
சிந்தனைக் குரிய சிவமே.

**அநுபல்லவி**

அன்றுதொட் டின்றுவரை ஆருக்கும் அறிவரிதாய்
மன்றினில் நடமிடும் மான்மழு வேந்தியே - சிந்தனைக்

**சரணங்கள்**

எங்கும் நிறைந்தவனே என்னிதய வாசியே
பொங்கும் அருளதனைப் பொழிந்தெனை ஆளுவாய்
திங்களும் கங்கையும் சென்னியில் அணிவாயே
மங்கையோர் பாகனே மாறாக் கருணையாய் - சிந்தனைக்

ஏனிந்த வுறக்கம் எமைப்பிற ரிழிக்கவுன்
ஞானத்தை அளித்தால் ஈனமு மாமோ
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடைத் தேவே
தானத்தைத் தந்தெமைச் சார்புடன் ஆளுவாய் - சிந்தனைக்

சிந்தா மணியே செஞ்சுடர்ச் சோதியே
நொந்தார் குறைதீர் நொடித்தான் மலையாய்
எந்தாய் ஈசா ஏறமர் செல்வா
சிந்தா குலந்தீர்த் தெமையாள் சிவமே - சிந்தனைக்

**- சிவசிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume: 88 (November - December 2024 ) Issue : 11-12

# SIVADHYANA

O man! you are Truth. You are indestructible. No one can cause you harm. You are present here, there and everywhere. You are eternal.

Wander about in the jungle of the world with the assurance of a lion roaming the forest. Do not be discouraged on any account. There is nothing strange here. All is truth. There is not even one thing that is wrong.

O man! Even if heaven and earth be offered to you, do not seek to rule or possess them. Be a witness. Greatness is your birthright.

It cannot be attained by any device. It is as It is – Everything else is simply jugglery. You have neither knowledge nor ignorance. You are the Paramatma.

Om Tat Sat Om

O man! Be a little patient and see! You will understand who you are. Do not grieve over that which does not merit grief. Joy and sorrow are of the world. You are a conscious being. Nothing can affect you. Arise! Be awake! Open the door of heaven with the key of Sivadhyana and look! Everything will be revealed.

Om Santi Santi Santi

O friend! who has the right to call you a sinner? Are you not part and parcel of God? You have forgotten that. Repeat "Om Tat Sat Om" incessantly and surrender yourself to Him with your whole heart.

Do not neglect Sivadhyana. Finally everything will end well. Be not a slave to idleness nor to activity. What is the use of many words? A good harvest is reaped from soil that is well cultivated. So have no fear.

We are the servants of Siva. Ever since He has been, so have we also been. Heat and cold, joy and sorrow, youth and old age are the attributes of nature. Why then should we be worried by their impact? They appear and disappear. We neither appear nor do we disappear. Reality cannot become unreal. Unreality cannot become real.

Can there be dissatisfaction for us who have realized that everything is the work of Siva? or, for that matter, can there be satisfaction? We are like beads strung on the thread that is Lord Siva Himself. The thread never breaks and we are never scattered. There is no use in explaining this further.

Om Santi, Santi, Santi

O Comrade! Think with all your heart that you are the servant of God. All victory will be yours. There is nothing beyond that. Everything is at your feet.

Om Santi, Santi, Santi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# You do not require much learning to have faith in God and live happily

"God exists. He is everywhere. He is with me.
I have all I need to have"
- Say the Great Ones.

" I believe, that and I live in it. you do not
require much learning, it is enough if you
live in the light of this."
- Words of Our Master

Now and then we are carried to great heights by meditating on some sayings of Swamy. Through experience man develops belief. Believes mature into faith. Truly religious life is one of unshaken faith. Religious life is developed by living in the company of religious men and also by meditating on the sayings of Great Ones. It is rarely that we are blessed with the company of Sages. The nearest approach to the company of sages is the atmosphere that we create around us through meditation on their sayings. Natchintanai gives us the dhyanam of 'I am He' for us to be in such atmosphere, such purifying meditations we find coming here and there in 'Words of our Master' These carry us to spiritual heights.

Faith, in its simplest form, is acquired by man when as a child be believes that the loving look of the mother is followed by the nourishing milk that sooths his hunger. Aa he grows up a similar faith develops that might follow the day; this faith has to be developed by experience. We have to live the life indicated in the words of Sages to gain the faith that the words can give; that is, we have to put into practice the Truths in the words, when he lives in the company of sages one is having precepts by example from their way of life. Everyone enjoys the milk of motherly love in the presence of the Great Ones like our Swamy. When the mind is battered from all sides in the battle of life man finds the milk of human kindness flowing from the words of Sages and this sooth us when we do meditation with their words.

Holy utterances of Great Chellappar came forth like mad talk, Swamy 'stood and waited behind him for the occasional gem that fell out all the mad talk'. In the 'words of the master' we have a record of our occasional gems that fell out of the holy mouth of Swamy. The Great chellappar kept aloof from people, but Swamy and a few others, who had climbed spiritual heights from which the Spiritual Greatness of Chellappar Swamy was visible, stood behind him to pick the gems, we sat in the presence of Swamy and benefitted from his talks. Very great devotees had picked gems from his talks with themselves and others and recorded them and we are fortunate that some of such recorded words have appeared as 'Words of our Master'.

From these gems one talk shines out brilliantly like a Kobinoor gem. This article is meant to introduce the readers to this very precious of an utterance by the Sage of Kolumbuturai. The utterance is given as the opening lines of this article.

It is in very simple words but it forms a precept of very great power. It is in the form of a precept by example – examples of Great Sages who gave the precept and the example of Swamy himself who lived the life indicated in the precept.

Though the words are simple enough and any one can understand them, it will be no wastage of time to expand the saying, and think on it in the following way:

It states that the Great ones who have experienced God say that God exists: that God exists everywhere; that God is with them and in the same way with every one and that they have all

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

that they need and hence are contented with what they get without any striving; and God gives to everyone so as to get all necessities without undue striving. In the second part of the words swamy recounts that he become a devotee to the precepts given by the Great ones; that he lived in the faith of the precept. The third part states that to live in the life of great profit to the Atma one need not have much learning, that anyone with an ordinary education can live that life. It is enough if one lives always with the knowledge that words of the Sages give.

In these words, Swamy gives a picture of the Sages's faith in God that He exists and that He is in every one of us and He sees to the needs of every one of us; and after that he mentions his faith in the saying and that he lived with that Faith. Finally, it is like Swamy saying you can understand the saying well, because it does not require much learning to understand it; you can believe it and you can live in that belief; therefore, meditate on this saying of sages. Develop the belief therein and live in that belief happily.

பொதுசன நூலகம்
16 NOV 2024
யாழ்ப்பாணம்

## LAWS OF GOD

1.God's laws are eternal and unalterable and not separable from God Himself. It is an indispensable condition of His very perfection.

2.God Himself has reserved no right of revision of His own laws nor is there any need for Him for any such revision. He is all-powerful, all-knowing. He knows at the same time and without any effort the past, the present and the future. He has therefore nothing to reconsider, nothing to revise, nothing to alter and nothing to amend.

3.We do not know all the laws of God nor their working. Knowledge of the tallest scientist or the greatest spiritualist is like a particle of dust. If God is not a personal being for me like my earthly father, He is infinitely more. He rules me in the tiniest detail of my life. I believe literally that not a leaf moves but by His will. Every breath I take depends upon His sufferance.

4.He and His Law are one. The Law is God. Anything attributed to Him is not a mere attribute. He is the attribute. He is Truth, Love and Law and a million things that human ingenuity can name.

5.The laws of Nature are changeless, unchangeable, and there are no miracles in the sense of infringement or interruption of Nature's laws. But we limited beings fancy all kinds of things and impute our limitations to God. We may copy God, but not He us. We may not divide Time for Him, Time for Him is eternity. For us there is past, present and future. And what is human life of a hundred years but less than a mere speck in the eternity of Time?

**-Mahatma Gandhi**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை **9** ஆம் பதிப்பு | *1200.00* |
| 02. | NATCINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு | 12.00 |
| 05. | யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ஆம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 250.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 5ஆம் பதிப்பு) | 300.00 |
| 14. | KANDHAPURAANAM | 400.00 |
| 15. | YOGASWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPIRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOGASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | சிவஞான சிததியார் | 500.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாத வசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 250.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 1000.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு. க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82, W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of
Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.

Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. DOP/News/ 68/2024

a) Printer : Arissona Pvt Ltd
Advertising & Publications
91, Palaly road, Thirunelveli, Jaffna.
T.P.: 021-2223222
b) Publisher S.Manivasakan
c) Published for Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Srilanka.
T.P.:021-2222799
d)Date of Publication: 01.11.2024
e)Editor S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilaiyam,
Chenkalady.
T.P:065-2240272

If undelivered please return to:
The Manager, "Sivathondan Nilaiyam"
434,K.K.S. Road, Jaffna, Srilanka.




**Public Library**
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org